₹100/-

ஞானகுரு

# மகிழ்ச்சி

டிசம்பர் 2022


எஸ்.கே.முருகன்



## கடவுளின் எல்லை எது?

## கவித்துவம்

மாறிவிடும்
அல்லது
பழகிவிடும்
அவ்வளவுதான்
வாழ்க்கை!
- ஜெயலக்ஷ்மி







# தினமும் ஸ்டார் ஹோட்டலில் வாழுங்கள்...

ஐந்து நட்சத்திர ஹோட்டல் போன்று ஹைடெக் வசதிகள் நிரம்பிய அறையில் தங்குவதற்கு வாய்ப்பு பலருக்கும் ஏதேனும் ஒரு நாள் கிடைத்திருக்கலாம். அதுபோன்ற நேரங்களில் என்னவெல்லாம் செய்திருப்பீர்கள்..?

இலவசமாக வழங்கப்பட்டிருக்கும் சோப்பு, ஷாம்பு, எண்ணெய் போன்றவைகளை முழுமையாக பயன்படுத்துவீர்கள். சொந்தமாக பேஸ்ட், டூத் பிரஸ் கொண்டுவந்திருந்தாலும், ஹோட்டலில் வைக்கப்பட்டிருக்கும் காம்ப்ளிமென்ட்ரி பேஸ்ட், பிரஸையே பயன்படுத்துவீர்கள்.

வழக்கமாக காக்காய் குளியல் போடும் நபராக இருந்தாலும், ஹோட்டல் அறையில் வெந்நீர் போட்டு நிதானமாக ரசித்து குளிப்பீர்கள். பாத் டப் இருந்தால், அதில் வெந்நீர் நிரப்பி அரை மணி நேரமாவது நிச்சயம் செலவிடுவீர்கள். உங்கள் சொந்த துண்டை பயன்படுத்தாமல் ஹோட்டலில் கொடுக்கப்பட்டிருக்கும் பாத் டவலை பயன்படுத்துவீர்கள். காஃபி, டீத்தூள், சர்க்கரை போன்றவைகளின் சாம்பிள் பாக்கெட்களை டேஸ்ட் செய்து பார்ப்பீர்கள் அல்லது உங்கள் சூட்கேஸில் எடுத்து பத்திரப்படுத்துவீர்கள்.

பெரிய ஹோட்டல் என்றால், நிச்சயம் காலை உணவு இலவசமாக இருக்கும். ஆகவே, சரியான நேரத்தில் ஆஜராகி, எத்தனை வகை உணவு வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அத்தனையிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து டேஸ்ட் பார்ப்பீர்கள். அந்த ஹோட்டலில் காணப்படும் வித்தியாசமான சிற்பங்கள், ஓவியங்கள் அருகே நின்று செல்ஃபி எடுத்துக்கொள்வீர்கள். அறைக்குத் திரும்பியதும் முழுமையாக ஏசியை வைத்து, போர்வையை நன்றாக போர்த்திக்கொண்டு தொலைக்காட்சி பார்ப்பீர்கள். அதாவது, அந்த ஹோட்டலில் என்னவெல்லாம் அனுபவிக்க முடியுமோ, அத்தனை வசதிகளையும் முழுமையாக அனுபவிப்பீர்கள்.

இப்படிப்பட்ட நல்ல வாய்ப்பு இனி கிடைக்காமல் போகலாம் என்ற நினைப்பில், எப்படியெல்லாம் அந்த அறையை முழுமையாக அனுபவிக்க முடியுமோ, அப்படி அனுபவிப்பீர்கள். இது போன்ற வாய்ப்புகளை முழு மகிழ்ச்சியுடன் அனுபவிக்கும் மனிதர்கள், அதே போன்ற வாய்ப்பு அவர்களுக்கு வாழ்நாள் முழுமைக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மறந்துவிடுகிறார்கள்.

ஆம், இந்த உலகம், இந்த ஊர், வீடு, உடல், மனம் போன்றவையே அந்த நட்சத்திர விடுதி. இங்குள்ள காற்று, கடல், மலை, செடி, கொடி, விலங்குகள், பறவைகள் என எல்லாமே மனிதர்களுக்கு ஆனந்தம் தரக்கூடியவை. எனவே, இவற்றை திகட்டத்திகட்ட அனுபவிக்கலாம்.

இந்த உலகத்தை அனுபவிப்பதற்குப் பதிலாக, சொந்தம் கொண்டாட முயற்சிப்பது தான், வாழ்க்கையை போராட்டக் களமாக மாற்றுகிறது. இந்த உலகமென்னும் ஸ்டார் ஹோட்டலில் இருந்து உங்களால் எதையும், எங்கேயும் கொண்டுபோக முடியாது.

எனவே, உலகமென்னும் ஹோட்டலை முழுமையாக அனுபவித்து வாழுங்கள். ஹோட்டலை காலி செய்வது போன்று மனநிறைவுடன் இவ்வுலகை விட்டுச் செல்லுங்கள்.

இதுவே மகிழ்ச்சி.

**ஆசிரியர்**



# கடவுளின் எல்லை எது?

கடவுள் இருக்கிறாரா என்ற கேள்வி, மனிதன் சிந்திக்கத் தொடக்கிய காலத்தில் இருந்து இன்று வரை கேட்கப்பட்டு வருகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், இதற்கு இன்னமும் சரியான பதில் கிடைக்கவில்லை என்பதுதான்

அதேநேரம், கடவுள் நிச்சயம் இருக்கிறார். அவர் மனிதர்களின் அறிவின் எல்லையில் நிற்கிறார் என்று சொல்லப்படும் இந்த பதில் சிந்திக்கத் தூண்டுவதாக இருக்கிறது. இதனை படித்துப் பாருங்கள்.

புடலைக்கொடியில் வெங்காயம் விளையாது என்று ஒரு கடைநிலை மனிதனுக்கும் தெரியும். அவனிடம் இதை நம்பு என்றால் சிரிப்பான். அங்கு அவன் அறிவை நம்புவதால் மாயாஜாலங்களை நம்புவதில்லை.

அதே மனிதனிடம் புடலை எப்படி விளையும் என்றால் விதையிலிருந்து என்பான். விதைக்குள் உயிர் எங்குள்ளது என்றால் அறிவியல், தெரியாவிடில் கடவுள் அருளாகிப்போகும். ஒரு அறிவியல் படித்தவனிடம் இதே கேள்வி போகும் போது விதை செயல்படும் விதம், மரபு, டி.என்.ஏ. வரை சொல்லிக்கொண்டே போவான். அதுவரை கடவுளும் விலகி நடப்பார்.

தானே ஒரு இயக்கம் எப்படி சாத்தியம்..? ஆதி எது என்றால். அவனுக்கும் பதில் தெரியாத போது கடவுளின் கடாட்சமாகிப்போகும்.

அதை மீறி படித்தவனிடம் போய் கேட்கும் போது, பிக் பாங்க், பிரபஞ்சம் வரை பதில் வரும். அதன் விளிம்பில் போய் கடவுள் நின்று கொள்ளுவார்.

எங்கே உங்களிடம் விடையில்லையோ அதுவே கடவுள் நிற்கும் புள்ளி. அதாவது அவரை எங்கு நிறுத்த வேண்டும் என்பதைக்கூட நாம் தான் நம்மை அறியாமல் தீர்மானிக்கிறோம்.

இதுவரை கடவுளுக்கும் நமக்கும் ஒரு சிக்கலுமில்லை.

பிரபஞ்ச விளிம்பில் நிற்கும் கடவுள் எப்போதெல்லாம் உங்கள் வாழ்க்கைக்குள் வருவார்? அவருக்கு சில வழிகள் உண்டு.

சுயநலம், கள்ளம், பேராசை, தன்னம்பிக்கையற்றுப் போதல், தன்னை மீறிவிட்டது என சோர்ந்து அமர்தல், உழைக்க மறுத்தல், இதெல்லாம் அவருக்கான கடவுச்சீட்டு. லாட்டரியில் பணம் விழுணும் என்றால் கூட்டணிக்கு கூப்பிட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

மற்றபடி, நீங்கள் நம்புவது போல் படையல், பிராத்தனைகளில் மசிபவர் அல்ல.


எனவே, பிரபஞ்ச வெளியின் எல்லையில் அவரை நிறுத்திவிடுவது அவருக்கும் நமக்கும் நல்லது.

**- சனத்குமார்.**

**மந்திரச்சொல்**

"கடந்துசென்ற அனைத்தும் பாதைகள் அல்ல, கற்றுக்கொண்ட பாடங்கள்."

www.gyanaguru.com



# மனைவி என்றால் அம்மா கணவன் என்றால் அப்பா

கல்யாணம் ஆனதும் பெண்கள் கண்டுபிடிக்கும் முதல் கண்டுபிடிப்பே... கணவனுக்கு ஒன்றுமே தெரியாது என்பதுதான். ஆனால், இதை கடைசி வரையிலும் ஆண்களால் கண்டுபிடிக்கவே முடிவதில்லை, அதனால் தான் கணவன், மனைவிக்குள் இத்தனை சண்டைகள் நடக்கின்றன.

கல்யாணத்திற்கு பிறகு இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கு எந்த ஒரு இலக்கணமும் கிடையாது. எனவே, ஒவ்வொருவரும் தாம்பத்தியம் என்ற கிணற்றில் தள்ளி விடப்பட்டு அவர்களாகவே நீச்சல் கற்றுகொள்கிறார்கள்.. இதில் கரை சேர்வோரும் உண்டு, மூச்சு முட்டி மூழ்குவோரும் உண்டு.

மருத்துவ ஆய்வு படி, ஒரு பெண் 32 வயதில் நல்ல மனப்பக்குவம் அடைந்து விடுகின்றாள். ஒரு ஆண் பக்குவம் அடைய 43 வயது ஆகின்றது. இந்த மனப்பக்குவம் என்பது சண்டையை எளிதில் தவிர்க்கும் அல்லது சமாளிக்கும் வழியை அறிந்துகொள்வதே தவிர, சண்டை இல்லாமல் வாழ்வது அல்ல.

இயல்பாகவே பெண்கள் நிறைய கேள்வி கேட்பவர்கள். ஆண்கள் இயல்பாகவே, கேள்விகளை விரும்பாதவர்கள். இதை சொல்வதற்கு ஒரு பிரபல நகைச்சுவை உண்டு. அதாவது, அமெரிக்காவை கண்டுபிடிக்கும் முன் கொலம்பஸுக்கு திருமணம் ஆகியிருந்தால், அவன் கிளம்பும்போது கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும்.


எங்கே போறீங்க? யார்கூட போறீங்க? ஏன் போறீங்க? எப்படி போறீங்க? எப்ப திரும்ப வருவீங்க? எனக்கு என்ன வாங்கிட்டு வருவீங்க? கண்டிப்பாக நீங்கள் தான் போக வேண்டுமா? உங்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகள் ஏற்படும்? என்றெல்லாம் வரிசையாக நூற்றுக்கணக்கான கேள்விகளை மனைவி கேட்டிருப்பாள். ஒரு மனைவியாக இந்த கேள்விகள் நியாயமாகவே இருக்கும். எனவே, இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், கொலம்பஸ் நிச்சயம் பயணத்தை நிறுத்தியிருப்பான்.

தினமும் ஆண்கள் பேசுவதை விட இரண்டு மடங்கு அதிகமாக பெண்கள் பேசுகிறார்கள். எனவே, அவள் சாதாரணமாகப் பேசுவதும் சண்டையாக மாறிவிடுவது உண்டு.

இந்த விஷயத்தில் காதல் திருமணம் உயர்ந்தது அல்லது பெற்றோர் முடித்துவைக்கும் திருமணமே நிலைத்து நிற்கும் என்றெல்லாம் எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது. பிரிவதும், சேர்ந்திருப்பதும் சம்பந்தப்பட்ட இரண்டுபேரின் மனம் சம்பந்தப்பட்டது.

www.gyanaguru.com

தங்களைத் தவிர மற்ற எல்லா தம்பதியும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வது போன்று நினைப்பதுதான் பெரும்பாலான தம்பதிகளின் ஆதங்கம். வீட்டுக்கு வீடு வாசல்படி. எல்லா வீடுகளிலும் பிரச்னை உண்டு என்பதை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும்.



ஏனென்றால், காதலித்து கல்யாணம் செய்தவரும் கட்டிலைப் பிரித்து போட்டதுண்டு. பெற்றோர் நிச்சயித்த திருமணத்திலும் பேரன்பு பெருக்கெடுப்பதுண்டு. அன்பிருந்தும் பணமிருந்தும் சந்ததி இல்லாத குடும்பங்களும் உண்டு. சந்ததி இருக்கும் குடும்பங்கள் சாப்பாட்டுக்கே கஷ்டபடுவதுண்டு. ஒவ்வொரு நபருக்கும் ஏதாவது ஒரு பிரச்னை இருக்கவே செய்கிறது. அழகாக இல்லை என்றால் பிரச்னை, அழகாக இருப்பதை கவனிக்கவில்லை என்று பிரச்னை. சம்பாதிப்பது குடும்பத்திற்கு போதவில்லை என்று ஒரு பிரச்னை, அதிகம் சம்பாதிப்பவர் குடும்பத்திற்கு போதிய நேரம் ஒதுக்கவில்லை என்று பிரச்னை.

தங்களைத் தவிர மற்ற எல்லா தம்பதியும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வது போன்று நினைப்பதுதான் பெரும்பாலான தம்பதிகளின் ஆதங்கம். வீட்டுக்கு வீடு வாசல்படி. எல்லா வீடுகளிலும் பிரச்னை உண்டு என்பதை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல், எந்த சண்டையும் தானே உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறது.

‘ஒரு கத்திரிக்காய்கூட சரியா வாங்கத் தெரியவில்லை’ என்று மனைவி மட்டம் தட்டியதும், ‘அப்படின்னா நீயே போய் வாங்குடி’ என்று கணவன் எகிறும்போது சண்டையாகிறது.

’நீ செஞ்ச பிரியாணியை வாயிலே வைக்க முடியலை… செம உப்பு’ என்று கணவன் முகம் சுளித்து சொன்னதும், ‘எனக்கு தெரிந்த லட்சணம் இவ்ளோதான் ..நீங்க உங்க அம்மா வீட்டுக்கு போய் சாப்பிடுங்க’ என்று மனைவி பதில் சொன்னதும் பூகம்பம் ஆரம்பம்.

சண்டை போடும் தம்பதியர், இணைந்து வாழ்வதற்கு ஒரு புதிய டெக்னிக் சொல்கிறார்கள், மனநல ஆலோசகர்கள். அதன்படி, மனைவியைக் கணவன் ‘அம்மா’ என்றும், கணவனை மனைவி, ‘அப்பா’ என்று அழைப்பதும் நல்ல பலன் தருகிறது என்கிறார்கள்.


ஏனென்றால், ஒவ்வொரு ஆணும் அம்மாவைப் போன்ற அன்பான மனைவிக்குத்தான் ஆசைப்படுகிறான். ஒவ்வொரு பெண்ணும் அப்பாவைப் போன்று பாதுகாக்கும் ஆணுக்குத்தான் காத்திருக்கிறாள். எனவே, ‘சொல்லும்மா… சாப்பிட்டியாம்மா என்று ஆண் கேட்பதும் ’என்னப்பா… சாப்பிடுங்கப்பா’ என்று பெண்ணும் பேசத் தொடங்கினால், தம்பதிக்குள் நெருக்கம் அதிகமாகும் என்கிறார்கள்.

சொற்களே செயல்களாகின்றன அப்பா - மகள் உறவும், அம்மா - மகன் உறவும் தலைகீழ் மாற்றம் அடையக்கூடியவை. அதாவது. மனைவி தனக்கு மகள் என்று கணவன் நினைக்கத் தொடங்குவதும், கணவனை தன்னுடைய மகனாக மனைவி நினைப்பதும் புதிய மாற்றமாக இருக்கும். ஏனென்றால், மகன் அல்லது மகள் ஏதேனும் தவறு செய்யும்போது, பெற்றோர் எத்தனை கண்டிப்பு காட்டினாலும் அன்பு காட்டுவதை நிறுத்துவதில்லை. அதே நிலை தம்பதி உறவுக்குள்ளும் உருவாகும்.

எத்தனை திட்டினாலும் பிள்ளையை எந்த ஒரு தாயும் பட்டினி போட மாட்டாள். பிள்ளை மீது எத்தனை கோபம் இருந்தாலும், ஏதேனும் ஒன்று வேண்டும் என கேட்டுவிட்டால், அதை வாங்கித்தருவதற்கு தந்தை மறுக்க மாட்டார். அத்தகைய அன்புதான் கணவன், மனைவிக்குள் வர வேண்டும். அத்தகைய மனநிலைக்கு தம்பதி வந்துவிட்டால், அந்த குடும்பத்தில் சண்டைகள் நடந்தாலும், பிரிவுக்கு இடமில்லை.







நீ
நான்
அவள்
இவன்
அவன்
பூனை
புண்
பூ
புழு
பூச்சி
குண்டூசி
குத்தூசி
கடப்பாரை
லொட்டு லொடக்கு
எல்லாம்
ஸ்வாமி
உபயம்
ஸ்வாமி
சிற்பி
உபயம்

- பசவய்யா

கவித்துவம்



? தெய்வ நம்பிக்கை நல்லதா, கெட்டதா?

- எஸ்சந்தானலட்சுமி, விழுப்புரம்.

**ஞானகுரு :**

நம்பிக்கையே வாழ்வின் மிகச்சிறந்த அம்சம். தனக்கு எந்த ஆபத்தும் வராமல் அம்மா காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கை குழந்தைக்கு உண்டு. தன்னை ஒருபோதும் கைவிட மாட்டான் என்று காதலனை நம்புகிறாள் காதலி. தனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் குடும்பத்தை நிறுவனம் அல்லது இன்சூரன்ஸ் காப்பாற்றும் என்று கணவன் நம்புகிறான். இப்படி ஒவ்வொரு நபரிடமும் ஏதேனும் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை உண்மையோ, பொய்யோ... ஆனால் வாழ்க்கைக்கு நிம்மதி கொடுக்கிறது, சந்தோஷம் தருகிறது. அதேபோன்று தெய்வம் மீது நம்பிக்கை வைக்கிறாய். அந்த நம்பிக்கையை தெய்வம் காப்பாற்றுமா என்று யோசித்துப் பார். ஏனென்றால், ஒரு சிங்கத்தின் சிலையால் உன்னை ஒருபோதும் கொல்ல முடியாது. இடைத்தரகர்களை நம்பி ஏமாந்து போகாதே. உன் மனதுக்குள் இருக்கும் இறைவனை கண்டுபிடித்து நம்பிக்கை வை... அந்த நம்பிக்கை வாழ்க்கையை நிம்மதியாக்கி விடும்.

Q A

# ஞானகுரு பதில்கள்



? கல்விக்கும் அனுபவத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

- டி.சங்கீதா, திருச்சி

**ஞானகுரு :**

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்றெல்லாம் நிச்சயம் பள்ளியில் படித்திருப்பாய். மனப்பாட பாடல்களும், கணித சூத்திரங்களும் எழுதி நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கியிருப்பாய். ஆனால் இப்போது உனக்கு அது ஞாபகம் இருக்காது, தேவையும் இருக்காது. அனுபவம் என்பது கல்வெட்டு. சின்ன வயதில் கற்றுக்கொண்ட நீச்சலை 50 ஆண்டுகள் பயன்படுத்தவில்லை என்றாலும், மறந்து போகாது. ஏட்டுக் கல்வியும் அனுபவமும் இணைந்தால் வெற்றி சுலபம்.

? மரணம் நிச்சயம் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் எந்த நம்பிக்கையில் மனிதன் வாழ்கிறான்?

- பி.குமார், சென்னை.

**ஞானகுரு :**

வெடிக்க வேண்டும் என்பதற்காகவே பட்டாசுகள் உருவாக்கப்படுகின்றன. அது முடிவு அல்ல, அதுதான் எல்லை. அப்படித்தான் வாழ்க்கையும். பிறப்பு மனிதன் கையில் இல்லை. பிறந்துவிட்ட காரணத்துக்காக வாழ்ந்துதான் ஆக வேண்டும். மரணம் முதுகுக்குப் பின்னே காத்திருக்கிறது என்ற உண்மை புரிந்தவருக்கு தவறுகள் செய்யவும், ஆடம்பர வாழ்வுக்கும் ஆசை வராது. ஆனால் தனக்கு மட்டும் இப்போதைக்கு மரணம் வராது என்பதுதான் மனிதர்களின் போலியான நம்பிக்கை. அந்த நம்பிக்கையே மனிதனை இஷ்டப்படி கஷ்டப்பட வைக்கிறது.










? சிலரால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவே முடிவதில்லை, ஏன்?

- சி.சரவணகுமார், பாண்டிச்சேரி.

**ஞானகுரு :**

முன்னேற்றம் என்பது பார்ப்பவர் கண்களில் இருக்கிறது. ஏதேனும் தொழில் செய்து உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடிந்தாலே அது வெற்றியே. காரும், பங்களாவும் வாங்கினால்தான் முன்னேற்றம் என்று நினைக்கத் தேவையில்லை. பிறர் கண்ணுக்காக முன்னேற்றம் அடைவது யாருக்கும் அவசியமில்லை.

? இறைவனை அடைய வழி என்ன?

- ஜி.பத்மா, வத்ராப்.

**ஞானகுரு :**

12பி பஸ் பிடித்து மூன்றாவது ஸ்டாப்பில் உனக்காக கடவுள் காத்திருப்பது போல் கேள்வி கேளாதே. எல்லா நதிகளும் கடலை நோக்கி ஓடுவது போல், உனக்கான வழியை நீயே தேடு. அதற்கு எளிய வழி ஒன்று உண்டு. ஆம், இந்த வாழ்க்கையை நிம்மதியாக வாழு. நீயே கடவுள் என்று எண்ணிக்கொள். இறைவன் உன்னைத் தேடி நிச்சயம் வருவான்.

? எங்கு மௌனம் சாதிக்க வேண்டும்?

- எஸ்.மணிகண்டன், லால்குடி.

**ஞானகுரு :**

சாதிக்க ஆசைப்படும் இடங்களிலும், அவமானம் நிகழும் இடங்களிலும் மௌனமாக இரு. கோபத்தைவிட மௌனத்தின் எதிர்ப்பு வலிமையானது.



? தான் செய்யும் தொழிலை, தன் வாரிசு செய்யவேண்டாம் என்று பெற்றோர் கூறுவது ஏன்?

- ஏ.காயத்ரிதேவி, திருநெல்வேலி.

**ஞானகுரு :**


ஏதாவது ஒரு தொழில் அல்லது வேலை செய்து பணம் ஈட்டுவதுதான் ஆணின் வாழ்க்கையாக இருக்கிறது. 99 சதவிகித ஆண் மனதுக்குப் பிடிக் கவில்லை என்றாலும், பணத்துக்காகவே தொழிலும் வேலையும் செய்கிறார்கள். புல்லாங்குழலைக்கூட மனிதன் விரக்தியுடன் விற்பனை செய்கிறான். தந்தை செய்யும் தொழிலை நூறு மடங்கு சிறப்பாக செய்யும் திறமை வாரிசுக்கு இருக்கும் என்பது தான் உண்மை. இது குலத் தொழிலை ஆதரிப்பது அல்ல, குலத் தொழிலால் உயர்வது. அதேநேரம், விருப்பப்பட்ட தொழிலை செய்வதற்கு பிள்ளையை அனுமதிப்பதே, பெற்றோருக்கு அழகு.

? ஆணும், பெண்ணும் எங்கு வேறுபடுகிறார்கள்? எதில் ஒற்றுமை இருக்கிறது?

- எம்.சசிகலா, சாத்தூர்.

**ஞானகுரு :**

உடல் ரீதியில் பெண் என்பவள் மான் என்றால் ஆண் என்பவன் யானை. ஆணைவிட பெண்ணுக்கு மன முதிர்ச்சி விரிந்தும், விரைந்தும் ஏற்படுகிறது. அதனால் தான் பள்ளியில் ஆண் பிள்ளையைவிட பெண் பிள்ளைகள் அதிக மதிப்பெண் வாங்குகிறார்கள். ஆண் தன்னைவிட அறிவு குறைந்தவனாக பெண் கணக்கு போடுகிறாள். பெண்ணுக்கு அறிவு தேவையில்லை என்பது ஆணின் எண்ணம். இந்த இரண்டு மிருகமும் ஒருபோதும் ஒற்றுமையாக வாழவே முடியாது. ஆனால், அப்படி வாழும் வகையில் மனிதகுலம் படைக்கப்பட்டுள்ளதே விசித்திரம். யானையின் அங்குசம் எதுவென பெண் அறிந்துகொண்டால், அங்கே ஒற்றுமை சாத்தியமாகிறது.



**? ஆன்மிக வாழ்வு அல்லது குடும்ப வாழ்வு... எது சிறந்தது?**

– எஸ்.ராஜேஷ், ஸ்ரீரங்கம்.

**ஞானகுரு :**

சிறப்பானதைக் கண்டுபிடிக்க சிரமம் தேவையில்லை. இயற்கையை வேடிக்கை பார். மிருகங்கள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், பூச்சியினங்களில் பெரும் பாலானவை கூட்டமாக வாழும் இயல்புடையவை. பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தும் பறவைகள் கூட்டம்கூட்டமாக குடிபெயர்ந்து வருகின்றன. ஆனால், மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் ஆன்மிகத்தை கடைப்பிடிப்பது இல்லை. மனிதன் மட்டுமே கடந்த காலம், எதிர்காலம் பற்றி சிந்திக்கிறான். அந்த பயத்தில் உருவானதுதான் ஆன்மிகம். அதனால் குடும்பத்தைக் கவனி. குடும்பத்தில் குழப்பம் வரும்போது, அதனை குடும்பத்தில் இருந்தே தீர்க்கும் வழியைப் பார். ஆன்மிக வாழ்க்கை என்பது கற்பனை நிம்மதி.



# ஞானகுரு பதில்கள்



**? கணவன், மனைவிக்குள் எப்போது ஈகோ தொடங்குகிறது?**

– எம்.முத்துப்பாண்டி, லட்சுமிபுரம்.

**ஞானகுரு :**

அறிவு, அழகு, புத்திசாலித்தனம் போன்றவற்றில் தன்னுடைய இணை தனக்கு ஏற்றவர் இல்லை என்ற எண்ணத்தாலே ஈகோ பிறக்கிறது. இப்படியொரு எண்ணம் பள்ளியில் அல்லது வேலை பார்க்கும் இடத்தில் வருவதில்லை. அதனாலே அங்கெல்லாம் சிக்கலில்லாமல் உலவ முடிகிறது. இணையையும் அப்படியே சக ஊழியராக, சக தோழராக பார்த்தால் ஈகோவை அழித்துவிடலாம்.

**? முன்னோர்களின் அனுபவத்தைத்தானே கல்வியாக கற்கிறோம்..?**

– டி.மணிகண்டன், கருப்பசாமி நகர்.

**ஞானகுரு :**

முன்னோர்களின் சிந்தனையே கல்வி. அதனை அனுபவித்துப் படிப்பவருக்கு வாழ்க்கை வசப்படும்.

**? மனைவி கணவனை எப்போது புரிந்துகொள்வாள்?**

– டி.கணேஷ்குமார், சூலக்கரை.

**ஞானகுரு :**

ஆணைவிட பெண்ணுக்கு புத்திசாலித்தனம் அதிகம். திருமணமானதுமே கணவனை முழுமையாக புரிந்து கொள்வாள். ஆனால் புரிந்துகொண்டதாக ஒருபோதும் காட்டிக்கொள்ள மாட்டாள். இதற்கு நேர் எதிர் ஆண்கள். மனைவியை புரிந்துகொள்வதே இல்லை. இன்னும் சொல்லப்போனால் புரிந்துகொள்ள முயற்சி செய்வதுகூட இல்லை. ஆனால் மனைவி பற்றி முழுமையாகத் தெரியும் என்று நினைப்பார்கள். இந்த முட்டாள்தனத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் இடைவெளியில் உள்ள விட்டுக்கொடுத்தலில் குடும்ப வெற்றி இருக்கிறது.



www.gyanaguru.com



**? உண்மையான மகிழ்ச்சி வீட்டுக்குள் இருக்கிறதா அல்லது வெளியிலா?**

– பி.பார்வதி, திருமங்கலம்.

**ஞானகுரு :**

வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை என்று பணக்காரன் ஒருவன் ஞானியிடம் வந்து முறையிட்டான். அவனை பார்த்த ஞானி, சட்டென்று பணக்காரனைப் பிடித்து மரத்தில் கட்டிவைத்தார். இவனை இந்த மரத்தோடு சேர்த்து எரித்துவிடுங்கள் என்று தன் சீடர்களுக்கு உத்தரவு போட்டார். சீடர்கள் அதற்கான ஆயத்தங்களை சீடர்கள் செய்யத் தொடங்கியதும் அலறினான், கதறினான். ஆனால், ஞானி அதனை கண்டுகொள்ளாமல் அங்கிருந்து வெளியேறினார். அவனை சுற்றி மரக் கட்டைகளை அடுக்கி தீ மூட்டுவதற்கு சீடன் முயன்ற நேரத்தில் மீண்டும் வந்து தடுத்து நிறுத்தினார் ஞானி. பணக்காரனின் கட்டுக்களை அவிழ்த்துவிடச் சொன்னார்.

“ஒரு நிமிஷம் நிஜமாவே செத்துப்போயிட்டேன். இப்போத்தான் எனக்கு உசுரே வந்திச்சு..” என்று பணக்காரன் தழுதழுத்தான்.

“உயிர் போகவும் இல்லை, வரவும் இல்லை. அது உன்னிடம்தான் இருக்கிறது. உனக்குள் உயிர் இருக்கிறது என்பதை உணர்த்தவே இப்படி செய்தேன். அதே போன்று மகிழ்ச்சியும் உனக்குள் இருக்கிறது. அதனை வீட்டிலோ வெளியிலோ தேடாதே, உனக்குள் தேடு” என்று அனுப்பிவைத்தார். பணக்காரனுக்கு எல்லாமே தெளிவாக விளங்கியது, உனக்கும்தானே...?



**? கிராம வாழ்வு, நகர வாழ்வு எது சிறப்பு?**

– மு.ராஜேஸ்வரி, இந்தரவள்ளியூர்.

**ஞானகுரு :**

மன நிறைவில்தான் சிறப்பு உள்ளது. அது கிராமத்தில் கிடைக்கலாம், நகரத்தில் கிடைக்காமலும் போகலாம்.





**? சோஷியல் நெட்வொர்க் எனப்படும் ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், டுவிட்டர், இன்ஸ்டாக்ராம் போன்றவை நல்லவைதானா?**

– எஸ்.பொற்கொடி, வத்றாப்.

**ஞானகுரு :**

கார், ரயில், விமானம், கம்ப்யூட்டர் போன்றவை கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலும் மக்கள் அச்சம் அடையவே செய்தார்கள். விஞ்ஞான முன்னேற்றத்தையும் மாற்றத்தையும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, சகலமும் கற்றுக்கொள். நல்லது, கெட்டது என்று ஒதுக்குவதும் ஏற்பதும் உன் விருப்பம்.

**? குழந்தைகளை வீட்டுக்குள் முடக்கும் இன்றைய பெற்றோர்களை திருத்துவது எப்படி?**

– எம்.ரஞ்சித், பொள்ளாச்சி.

**ஞானகுரு :**

முன்பு வீடு என்பது பல்கலைக்கழகமாக இருந்தது. கூட்டுக் குடும்பத்தில் ஏராளமான மனிதர்கள் இருப்பார் கள். கோபக்காரர், பாசக்காரர், உடல் ஊனமுற்றவர், கடும் உழைப்பாளி என்று விதவிதமான மனிதர்களை வீட்டுக் குள் தரிசிக்கவும், கற்றுக்கொள்ளவும், வாழ்க்கையை புரிந்துகொள்ளவும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்று ஒவ்வொரு வீடும் குழந்தைக்கு தனிமை சிறை. பெற்றவர் தவிர மற்றவர் எப்படி பழகுவார்கள், அப்படி பழகுவது என்று புரிவதில்லை. எனவே, பிராய்லர் கோழி போன்று பிள்ளையை வளர்ப்பது தான் பாதுகாப்பு என்று நினைக் கின்றனர். மூளைச் சலவை செய்யப்பட்ட பெற்றோரை மாற்றுவது இப்போதைக்கு சாத்தியமில்லை. பூக்கள் தானாக மலரவேண்டும், அதற்கும் ஒரு காலம் வரும்.



www.gyanaguru.com



# ராகு காலத்தில் பயணம் தொடங்கலாமா..?

குற்றாலத்திற்கு திடீர் பயணம் என்றதுமே கார் டிரைவர் சுந்தரத்திற்கு சுறுசுறுவென கோபம் வருவதையும், அதை அப்படியே அடக்கிக்கொள்வதையும் கவனித்தார் ஞானகுரு. அந்த கோபத்தை கார் ஓட்டுவதில் காட்டினார். முன்னே சென்று கொண்டிருந்த ஒவ்வொரு வாகனத்தையும் ஓவர்டேக் செய்து முன்னேறிக் கொண்டிருந்த சுந்தரம், ஒரு லாரியை முந்த முடியாமல்... அதன் வேகத்திலேயே பின் தொடர்ந்தார்.

இத்தனை அவசரம் வேண்டாமே என்று ஞானகுரு சொன்னதும், “நாற்பது வருஷமா வண்டி ஓட்டுறேன்... டிரைவிங் பத்தி யாரும் சொல்லித்தர வேண்டாம்...” என்று சொன்ன பதிலில் கோபம் எதிரொலித்தது. கோபம் அதிகரிக்கும்போது, முடிவு எடுக்கும் திறன் பாதிக்கும். அப்படித்தான் ஆனது சுந்தரத்திற்கு. முன்னே சென்ற லாரி வேகம் குறைப்பதைக் கணிக்காமல் விட்டதால், லாரியின் பின்புறத்தில் கார் சட்டென்று மோதியது. அந்த வேகத்தில் திக்குதெரியாமல் திசைமாறி பாதையில் இருந்து விலகி... கண்ணை மூடித் திறப்பதற்குள் ரோட்டோரத்தில் இருந்த ஒரு பெரிய புளிய மரத்தில் முட்டி நின்றது.

மோதிய காருக்குள் உருண்டு, முட்டி மோதி எழுந்த ஞானகுருவுக்கு நெற்றி, கை, கால்களில் அடிபட்டது. கண்ணுக்கு மேல் புறத்தில் இருந்து ரத்தம் வழிந்து, கண்களை மறைத்தது. ஆனாலும், தனக்கு எதுவும் நேரவில்லை என்று உடல் உறுதியுடன் சொல்லவே, சட்டென ரத்தத்தை வழித்துப் போட்டுவிட்டு, சுந்தரத்தைக் கவனித்தார்.

சுந்தரம் ஸ்டீரியங்கில் சாய்ந்தபடி மயக்கமடைந்திருந்தார். அதற்குள் சத்தம் கேட்டு ஓடோடி வந்த சிலரது உதவியுடன் சுந்தரத்தை காரில் இருந்து வெளியே இழுத்து, மரத்தடியில் படுக்க வைத்து, நாடித் துடிப்பை பரிசோதித்தார் ஞானகுரு. பயப்படும் அளவுக்கு இல்லை, சுந்தரத்திற்கு உடலில் வேறு எங்கும் காயம் இல்லை. எனவே, சுந்தரத்தின் உடம்பை அழுத்தமாக நீவினார். மோதிய லாரியின் டிரைவர் ஓடி வந்து பார்த்தான். அவனுடைய கைலியை சட்டென்று கழட்டி, ஞானகுருவுக்கு வழிந்துகொண்டிருந்த ரத்தத்தை துடைத்துவிட்டான். மேலும், ஒரு தண்ணீர் பாட்டிலை தேடி எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான்.

லேசாக தண்ணீர் தெளித்ததும், திகில் நிறைந்த முகத்துடன் கண் திறந்தார் சுந்தரம்.

”மீண்டும் பிறந்து விட்டீர்கள்... வெல்கம்...” என்று சிரித்தார்

www.gyanaguru.com

ஞானகுரு. சிரிக்கும்போது முகத்தில் ஆங்காங்கே வலி தெறித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

உயிர் பிழைத்ததையே நம்பமுடியாமல் தடுமாறி எழுந்த சுந்தரம், எந்த காயமும் இல்லாத காரணத்தால் சில நிமிடங்களில் சுதாரித்துக் கொண்டார். யாரோ ஒருவர் வீட்டில் இருந்து மருந்து எடுத்துவந்து, தடவி, நெற்றியில் வழிந்த ரத்தத்தை நிறுத்த கட்டு போட்டார். அனைவருக்கும் நன்றி சொல்லி எழுந்ததும் சுந்தரத்திடம், “காரை எடுங்கள்…” என்றார் ஞானகுரு. காரில் வந்த இருவருக்கும் பெரிய அடி எதுவும் இல்லை என்றதும் சுற்றியிருந்த கூட்டம் சுவாரஸ்யமின்றி முழுமையாகக் கலைந்தது. காரின் முன்புறம் லேசாக அடிபட்டிருந்ததை கவனித்த சுந்தரம், “ராகு காலத்துல கிளம்புனா இப்படித்தான்…” என்று முனகியபடி பரிசோதித்தார். சுருட்டு குடித்துக் கொண்டிருந்த ஞானகுருவுக்கு ‘சுருக்’கென கோபம் வந்தது. அவருடைய பாணியில் பேசத் தொடங்கினார்.

”மனதை முழுமையாக டிரைவிங்கில் செலுத்தாமல், காலத்தின் மீது பழியைப் போடுகிறாய்… இன்று உங்கள் முதலாளியும், நீயும் இந்த காருக்குள் உயிர் விடவேண்டும் என்பதுதான் விதி. அதனை என் ரத்தம் கொடுத்து தடுத்திருக்கிறேன். விபத்துக்காக கலங்குவதை விட்டு, உயிர் பிழைத்ததற்காக சந்தோஷப்படு…” என்றார்.

மந்திரச்சொல்

“நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று காத்திருக்காதே… மகிழ்ச்சியாக இருந்தால் நிலைமை மாறிவிடும்.”





எதிர்பார்த்தபடியே ஞானகுருவின் பதில் அவரை அதிர்ச்சி யடைய வைத்தது. திகில் நிறைந்த முகத்துடன் பேசினார்.

”ஆமா சாமி, இந்த சனிப்பெயர்ச்சியில எங்க முதலாளி உயிருக்கு ஆபத்துன்னு சொல்லியிருந்தாங்க. அதைத்தான் நீங்க தடுத்திருக்கீங்க. உங்களைப் பத்தித் தெரியாம தப்பாப் பேசிட்டேன். மன்னிச்சிருங்க சாமி…” என்று அளவுக்கு மீறி பணிந்தார். எல்லா பணக்காரர்களுக்கும் ஏதேனும் கண்டம் இருப்பதாக கதை விட்டால்தானே ஜோசியர்களுக்கு பிழைப்பு ஓடும். ஞானகுரு குருட்டாம்போக்கில் சொன்னதை நிஜமாகவே நம்பினார் சுந்தரம் என்றார்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. “ஜோதிடம், நல்ல நேரம், கெட்ட நேரம் போன்றவைகளில் நம்பிக்கை வைக்காதே… ஏனென்றால், உன்னுடைய தலையெழுத்து அல்லது முன் ஜென்மத்தில் நீ செய்த வினைகளே உன் வாழ்க்கையில் நன்மை, தீமை தருவதாக ஜோதிடன் சொல்வான். ஆனால், அவனே, ‘ஒருவர் பிறக்கும்போதுள்ள கிரகங்களின் நிலையே அவன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது’ என்றும் சொல்வான்.

தலையெழுத்தை மாற்றவே முடியாது என்று சொல்பவனே, சில பரிகாரங்கள் செய்தால் தீமைகளைக் குறைக்க முடியும் என்றும் சொல்வான். சனி பெயர்ச்சி, குரு பெயர்ச்சி போன்ற கிரகங்கள் உன் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்குவதாகச் சொல்வான்.

ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது. பூமிக்கு மிக நெருக்கமாக சந்திரன் இருப்பதால் அதன் ஈர்ப்பு விசை பூமியில் சில பாதிப்புகளை உண்டாக்கும் என்று சொல்வதைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், மற்றக் கிரகங்கள் எல்லாம் வெகு தொலைவில் இருப்பதால் அவைகளின் ஈர்ப்பு விசை பூமியை எட்டவே எட்டாது.

பூமியின் ஈர்ப்பு விசை கூட வானில் சில கிலோ மீட்டர் தூரம்தான் எனும்போது, மற்ற கிரகங்களின் ஈர்ப்பினால் பூமிக்கே எந்த பாதிப்பும் ஏற்படாத பட்சத்தில், அதில் வாழும் மனிதனுக்கு மட்டும் எப்படி பாதிப்பு ஏற்படும்?

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தம் என்று பிரித்து, அவற்றில் ராகு காலம் மற்றும் எம கண்டம் ஆகிய நேரங்களில் சுப காரியங்கள் செய்ய கூடாது என்கிறான். ராகு காலத்தில் குழந்தை பிறந்தால் வெளியே தூக்கிப் போட்டுவிடுவாயா..? எம கண்டத்தில் பணம் கொடுத்தால் வாங்க மாட்டாயா..? இந்த நேரம் என்பதே ஒரு மாயக் கணிதம். எனவே, தேவை இல்லாத சிக்கலில் நீயே போய் மாட்டிக் கொள்ளாதே, காரை எடு.. என்னை அருகே ஏதாவது ஒரு பஸ் ஸ்டாண்டில் இறக்கிவிட்டு ஊர் திரும்பு” என்றார்.

”கார் ஓடுமான்னு தெரியலையே…” என்று டூல் பாக்ஸை





எடுத்தார்.

”முதலில் நம்பிக்கை வை..” என்று சொல்லி அருகிலிருந்த மணலில் சாய்ந்து படுத்தார் கொஞ்சநேரத்திலேயே கார் உறுமும் சப்தம் கேட்டது. உடனே சுந்தரம் முதலாளிக்கு விபத்து பற்றிய தகவலை செல்போனில் சொல்லி, என்னுடைய சக்தியால் உயிர் பிழைத்ததையும் சொன்னார். முதலாளியின் பதிலை பணிவுடன் கேட்டுக்கொண்டார். இரண்டு நாட்கள் லேட்டாக வந்தாலும் பரவாயில்லை, சாமிக்கு ஒரு மருத்துவமனையில் சிகிச்சையளித்து, அதற்குப் பின் குற்றாலத்தில் இறக்கி விட்டுத்தான் வரவேண்டும் என்று முதலாளி சொல்லி விட்டாராம். சுந்தரத்திற்கு இப்போது ஞானகுரு மீது அபிமானமும் பயமும் கூடியிருந்தது.

எனவே ரொம்பவும் பிகு செய்யாமல் காரில் ஏறிக்கொண்டார் ஞானகுரு. இப்போது காரை சீராக ஓட்டினார் சுந்தரம். ராஜபாளையத்தை நெருங்கியபோது நன்றாக இருட்டி, மழையும் பெய்யத் தொடங்கியது. ஒரு டீ குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றவே ஒரு டீ கடை வாசலில் நிறுத்தச் சொன்னார். தனக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய வலிதான் என்று ஞானகுரு சொன்னபின்னரும் அருகே இருந்த மெடிக்கல் ஷாப்பில் இருந்து ஒரு மாத்திரை வாங்கி வலுக்கட்டாயமாகக் கொடுத்தார். மாத்திரையை வீசி எறிந்துவிட்டு டீ, பன் சாப்பிட்டதும் ஞானகுருவுக்குத் தெம்பு வந்தது.

மழை பலமாக பெய்யத் தொடங்கியது. மழை காலத்தில் காரில் பயணம் செய்வது அத்தனை சுகமான அனுபவம். மழையை வேடிக்கை பார்த்த நேரத்தில் ஞானகுருவுக்கு திடீரென பாடத் தோன்றியது. மகிழ்ச்சியாக பாடிக்கொண்டே பயணித்தார்.

”சாமி… நான் உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கலாமா?” என்று பீடிகை போட்டார் சுந்தரம்.

’’உங்கள் அனுபவத்துக்குத் தெரியாத எதை நான் சொல்லிவிடப் போகிறேன்…” என்று பழைய சமாசாரத்தைக் குத்திக் காட்டினார்.

அந்த குத்தலை கண்டுகொள்ளாத சுந்தரம், “சின்ன வயசிலேயே, எங்க முதலாளி கோடீஸ்வரனா இருக்கார். இன்னும் எத்தனையோ பேர் சொந்த வீடு கட்டி வசதியா செட்டிலாயிட்டாங்க. ஆனா எனக்கு இத்தனை வயசாகியும் சம்பளம் பதினைஞ்சாயிரத்து சொச்சம்தான். என் புள்ளைய நல்லா படிக்க வைக்க முடியலை, அவனும் என்னைப் போலவே ஒரு இடத்துல சொற்ப சம்பளத்துக்கு வேலை பார்க்குறான். என் ரெண்டு பெண் குழந்தைக்கும் கல்யாணம் முடிச்சுக் குடுத்தாலும், எதுவும் சொல்லிக்கிறமாதிரி இல்லை. ஒருத்தி புருஷன் கூட மல்லுக்கட்டிக்கிட்டு இருக்கா. இன்னொருத்தி விட்டுட்டு வந்துட்டா. சில நேரம் யோசிச்சுப் பார்த்தா எதுவுமே நிம்மதியில்லாம… என்னத்துக்குப் பிறந்தோம்னு தோணுது…” என்று தோற்றுப் போன படைவீரன் போன்று கேட்டார். சுந்தரத்தின் தோளைத் தொட்டபடி பேசத் தொடங்கினார் ஞானகுரு.

”சிலை வைக்கப் பட்ட மனிதர்கள் அல்லது பணம், புகழ், செல்வாக்குடன் இருப்பவர்கள் மட்டுமே மனிதனாகப் பிறந்ததற்கு அர்த்தமுள்ளவர்கள் என்று நினைக்கிறாயா..? சமுதாயத்தின் பார்வைக்கு இவர்கள் வெற்றி பெற்றவர்களாக இருந்தாலும், அவர்களுக்குள்ளும் கடைசிவரை ஏதாவது ஒரு மனக்குறை, போராட்டம் நடந்து கொண்டுதான் இருக்கும். நீங்கள் சொந்த வீடு கட்ட முடியவில்லை என்று வருத்தப் படுகிறீர்கள். ஆனால், உங்கள் முதலாளி சொந்த வீட்டில் நிம்மதியாக வாழ முடியவில்லையே என வருந்துகிறார்.





வெளியில் இருந்து பார்ப்பவருக்கு, உங்கள் முதலாளியின் பிரச்னைகள், வருத்தங்கள் தெரிவதில்லை. அவரை ஒரு வெற்றியாளராகவே பார்ப்பார்கள். அதனால் தேவையின்றி மனசைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். எல்லோருமே முழுமையானவர்கள், மனிதர்கள் அத்தனை பேருமே வெற்றி பெற்றவர்கள்தான்…”

’’ஆனா சிலர் அனுபவிக்கும் வசதி, சந்தோஷம் எங்களுக்குக் கிடைக்கிறதில்லையே…”

”ஆனால், ஒரு உண்மை தெரியுமா? சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மகாராஜாக்களும், சக்கரவர்த்திகளும் கூட இன்றைய சாதாரண மக்களைப் போன்று சொகுசாக, வசதிகளுடன் வாழ்ந்திருக்க முடியாது. ஏசி, ஹீட்டர், தொலைக்காட்சி, செல்போன், ஏரோப்ளேன் போன்ற வசதிகளுடன் வாழவில்லை என்பதால் அவர்களை தோற்றுப் போனவர்கள் என்பீர்களா?”

அமைதியாக இருந்தார் சுந்தரம்.

”அடுத்தவர்களுடன் ஒப்பீடு செய்யும்போதுதான் வெற்றி, தோல்வியும் உங்களைப் பாதிக்கிறது. உங்கள் வாழ்க்கையை மட்டும் நீங்கள் வாழுங்கள், அடுத்தவரைப் போன்று வாழ ஆசைப்பட்டால் கடைசிவரை துன்பம்தான். உங்களுக்கு மட்டுமல்ல ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் அத்தனை பேரும் துன்பமே அடைவார்கள். இத்தனை வயது வரையிலும் வேலை பார்க்கும் உடல் நலன் வாய்த்திருப்பது எத்தனை பெரிய வரம், குழந்தைகள் அனைவரையும் கரையேற்றியது எத்தனை பெரிய சாதனை. இதுவே நீங்கள் நிறைவாக வாழ்ந்ததற்கும், வெற்றி பெற்றதற்கும் சாட்சி. முதலாளியாக இல்லையே என்று வருத்தப்படுவதை விட சிறந்த டிரைவராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொள்ளுங்கள். உங்கள் முதலாளிக்கு இத்தனை சிறப்பாக வண்டி ஓட்டத் தெரியாது என்று பெருமைப்படுங்கள்” என்றதும் சுந்தரம் முகத்தில் சிறு கீற்றாக புன்னகை வந்தது.

# பழைய காதல்... புதிய திருமணம்..!



செடிகளுடன் பேசிக்கொண்டிருந்த ஞானகுருவை சந்திக்க இரண்டு இளம் பெண்கள் வந்தனர். இருவர் கண்களிலும் எக்கச்சக்க குழப்பம். முதல் பெண்ணை பார்த்து சிரித்ததும், அவள் பேசத் தொடங்கினாள்.

”என் கல்லூரியில் படிக்கும் பாலுவுடன் எனக்கு காதல் இருந்தது. சூழ்நிலை காரணமாக அவனால் என்னை திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. நானும் அவன் சூழலை புரிந்துகொண்டு விலகிவிட்டேன். இப்போது எனக்கு வேறு ஒருவருடன் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. நல்லவராகத் தெரிகிறார். அவரிடம் திருமணத்திற்கு முன்பே என் காதலை சொல்ல வேண்டுமா..?” ஆர்வத்துடன் கேட்டாள்.

காதலன் மனதில் இருக்கும்போது உன்னால் கணவனுக்கும் குடும்பத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகளை முழுமையாகச் செய்ய முடியாது. ஒரு கணவனின் நிலைமையில் நீ இருந்து பார். அப்போது தான், நீ எத்தகைய சுயநலவாதி என்பது தெரியவரும்.








**"இன்னமும் உன் இதயத்தில் பாலு இருக்கிறானா..?"**

"ஆம்... அவனை எப்படி என்னால் இதயத்தில் இருந்து தூக்கியெறிய முடியும்? முதல் காதல் என்றுமே மறையாது என்பார்கள். சூழல் மாறியதால் என்னை கைவிட்டானே தவிர, அவன் என்னை ஏமாற்றவில்லையே" என்றாள் உறுதியுடன்.

"மனதில் ஒருவர் இருக்கும்போது, இன்னொருவரை திருமணம் செய்துகொள்வது சரியென்று நினைக்கிறாயா... ஏனென்றால் பெரும்பாலான சினிமாக்களில் பழைய காதல் நினைவுகளை கொண்டாடுகிறார்கள், அதை மக்களும் ரசித்து பாராட்டுகிறார்கள். உண்மையில் அது ஒரு கேவலமான மனநிலை. நீயும் அதே போன்று, பழைய காதலன் நினைவுடன் புதிய கணவரை கைப்பிடிக்கும் முடிவுக்கு வந்துவிட்டாயோ..."

"திருமணம் செய்துகொண்டால் காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று அம்மா சொல்கிறாள்.."

"காலத்தைப் பற்றி உன் அம்மா சரியாகச் சொல்லி இருக்கிறார். உறவுகள் பற்றி இன்னமும் அவருக்குப் புரிதல் இல்லை. உண்மையில் நீ இன்னமும் திருமணத்துக்குத் தயாராகவில்லை பெண்ணே. மனதில் ஒருவன் இருக்கும் போது, இன்னொருவரை திருமணம் செய்ய நினைப்பதே தவறு. அப்படிப்பட்ட வாழ்க்கை இருவருக்கும் மிகவும் துன்பம் தரக்கூடியது. மனதில் ஒருவர், நிஜத்தில் ஒருவர் என்று வாழ்வதன் காரணமாகவே சண்டை, வன்முறை, கொலை, விவாகரத்து போன்றவை அதிகம் நடக்கின்றன. எந்த தவறும் செய்யாத உன் கணவன் கொல்லப்படலாம்.

எனவே, எப்போது பாலுவை மறக்க முடிகிறதோ, எப்போது உன்னால் கணவனுக்கும் பிறக்கப்போகும் பிள்ளைகளுக்கு மட்டும் முழு அன்பையும் தரமுடியும் என்று நினைக்கிறாயோ, அப்போது திருமணத்துக்கு சம்மதம் சொல்..."

**"என்னால் பாலுவை மறக்கவே முடியாது என்றால் என் எதிர்காலம்...?"**

"உனக்கு பாலுவின் நினைப்பு மகிழ்வு தருகிறது என்றால், அந்த நினைப்புடனே வாழ்ந்து செத்துப் போ. வேறு வாழ்க்கை வேண்டும் என்றால் நீ கடந்த காலத்தை மறக்க வேண்டும். நீ மறக்க வேண்டியது பாலுவைத் தான், காதலை அல்ல. உன் காதல் உன்னுடன் எப்போதும் ஒட்டிக்கொண்டு இருக்கலாம். அது தவறு அல்ல. ஆனால், பாலு உன்னுடன் இருக்க முடியாது. காதல் என்பது வேறு திருமணம் என்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளாதே... காதல் எவர் மீது வேண்டுமானாலும் வரும். ஆனால், திருமணம் என்பது எதிர்காலத்திற்கு உத்தரவாதம் தரும் ஒரு நபருடன் மட்டுமே நடக்கும்.

ஏதேனும் ஒரு நிறுவனத்தில் மட்டுமே ஒருவரால் முழு நேர ஊழியராக முழு உழைப்பையும் கொடுக்க முடியும். ஒரே நேரத்தில் இரண்டு நிறுவனங்களில் முழு நேர ஊழியராக இருந்தால், இரண்டு நிறுவனங்களையும் ஏமாற்றுவதாகத்தான் அர்த்தம். திருமணம் என்பதும் ஒரு நிறுவனம் போன்ற அமைப்புதான். எனவே திருமண பந்தத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் நிறையவே கடமைகளும், பொறுப்புகளும் உண்டு.

காதலன் மனதில் இருக்கும்போது உன்னால் கணவனுக்கும் குடும்பத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகளை முழுமையாகச் செய்ய முடியாது. ஒரு



கணவனின் நிலைமையில் நீ இருந்து பார். அப்போது தான், நீ எத்தகைய சுயநலவாதி என்பது தெரியவரும்.

எனவே பாலுவை மறந்த பிறகு திருமணம் செய்வதற்கு சம்மதம் சொல். உன் பழைய காதலை திருமணத்துக்கு முன்னரே கணவரிடம் மட்டுமின்றி, அவருடைய குடும்பத்தினருக்கும் சொல்லிவிடு, அப்போதுதான் திருமணத்துக்குப் பிறகு, பழைய காதல் உனக்கு துன்பம் தராது..." என்றவர் அடுத்த பெண்ணைப் பார்த்தார்.

"குருவே, எனக்கு திருமணம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு சண்டையால் ஆறு மாதங்களுக்கு முன்னர் பிரிந்து, இப்போது என் பெற்றோருடன் வாழ்கிறேன். விவாகரத்துக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. இப்போது நினைத்துப் பார்க்கும்போது, அந்த சண்டை அத்தனை பெரியதாகத் தோன்றவில்லை. ஆனால், என் குடும்பத்தாரும் அவருடைய குடும்பத்தாரும் கடுமையாக மோதிக் கொண்டார்கள். எனவே, நாங்கள் பிரிய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இப்போது நான் என்ன செய்வது..?" கண்களில் நீருடன் நின்றாள்.


**"உன்னுடைய ஈகோவை விட்டு கணவரிடம் பேசுவதற்கு மனம் இடம் கொடுக்கவில்லை, அப்படித்தானே..?"**

ஆம் என்று தலையசைத்தாள்.

"நீ சண்டைகளை மறந்து அவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறாய் என்பது உன் கணவருக்கு இதுவரை தெரியாது. இலவு காத்த கிளி போல நீ காத்திருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. எனவே, நீ காத்திருப்பதை அவருக்கு முதலில் தெரிவித்துவிடு. உனக்கு ஈகோ இடம் கொடுக்கவில்லை என்றால், உன் தோழிகள், பொதுவான நண்பர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்து.

அதற்கு முன்னர், நீ கணவருடன் சேர்ந்து வாழ்வது அல்லது முறையாக விவாகரத்து செய்து வேறு வாழ்க்கையை அமைத்து கொள்வது ஆகிய இரண்டில் ஒன்றை தெளிவாக தேர்வு செய். உன் பெற்றோர் இப்போது உனக்கு ஆதரவாக இருந்தாலும், எல்லா காலத்திலும் உனக்கு துணையாக இருக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்துகொள். எனவே, முடிவு எடுக்க வேண்டியது நீ மட்டும்தான். பிரிவது என்றாலும் இணைவது என்றாலும் அது உன் முடிவாக இருக்கட்டும்" என்றார் ஞானகுரு.

இருவரும் தெளிவுடன் விடை பெற்றனர்.










# மகிழ்ச்சிக்கு ரூ.500/-

















ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழ் வெற்றிகரமாக முதல் ஆண்டை நிறைவு செய்துள்ளது. ஒவ்வொரு இதழுக்கும் நேரிலும் போன் மூலமும் பாராட்டு மற்றும் ஆலோசனைகள் வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி.

மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்றவற்றை பரப்பும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழ் மாதம் தோறும் வெளியாகிறது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணைய தளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்கவில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத்தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

GPAY : +91 72997 53999
GHANAGURU PUBLICATION,
CITY UNION BANK,
CURRENT ACCOUNT
No. : 036109000092054,
IFSC : CIUB0000036.


www.gyanaguru.com

# பித்ருக்களை குப்பையில் போடு..!

ஞானகுருவை சந்திக்க வந்தார் மகேந்திரன். ”குருவே, இன்று நான் பித்ருகளுக்கு குறிப்பாக தாய்க்கு மகன் அளிக்க வேண்டிய 16 பிண்டங்கள் பற்றியும், அப்போது சொல்லப்படும் ஸ்லோகங்களின் அர்த்தத்தையும் கேட்டேன். என்னையும் அறியாமல் கண்ணில் நீர் வந்துவிட்டது. ஆனால், நீங்கள் என்னவென்றால், செத்தவர்களைப் பற்றி கவலைப்படாதே, இருப்பவர்களை மட்டும் பார்த்தால் போதும் என்கிறீர்கள். பெற்ற தாய்க்கு இப்படி மரியாதை செய்வதில் என்ன தவறு?” கோபமாகவே கேட்டார்.

”மகேந்திரா… நீ இப்போது செய்யும் வேலைக்கு ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்குகிறாய். அப்படி இல்லாமல், இந்த பிறவியில் எனக்கு வேலை செய், அடுத்த பிறவியில் சம்பளம் தருகிறேன் என்று சொன்னால் சம்மதிப்பாயா..?” ஞானகுரு கேட்டதும், கோபமானார் மகேந்திரன்..

”அது எப்படி முடியும்..? எனக்கு இப்போதைய வாழ்வுக்கு ஆதாரம் வேண்டும் என்றுதானே வேலை செய்கிறேன்…”

‘’அப்படித்தான் உயிருடன் இருக்கும் பெற்றோருக்கு எப்படியெல்லாம் உதவ முடியுமோ, அப்படியெல்லாம் உதவி செய்யலாம். அது தவறில்லை. ஆனால், பெரும்பாலான மனிதர்களுக்கு, முதிய வயதில் பெற்றோர் உயிருடன் இருப்பது சுமையாகத்தான் தெரிகிறது. அவர்களே செத்த பிறகு பிள்ளைக்கு ஞானம் வந்துவிடுகிறது. உடனே பெற்றோரை போற்றுவது போன்று, பித்ருகளுக்கு பிண்டம் வைக்கிறேன், உதவி செய்கிறேன் என்று நடிக்கிறார்கள். இதனால், பித்ரு பூஜை செய்யும் பிராமணனைத் தவிர வேறு யாருக்கும் எந்த நன்மையும் கிடையாது. எனவே, செத்துப் போன பித்ருக்களை குப்பையில் போட்டுவிடு… உன் பெற்றோர் போன்ற வயதில் உள்ளவர்களுக்கு உன்னால் முடிந்த வரையிலும் ஆதரவாக இரு… சின்னச்சின்ன உதவிகள் செய். அதுதான் செத்துப்போன பெற்றோருக்கு நீ செய்ய வேண்டிய கடமை..” என்றார் ஞானகுரு.

”நீங்கள் சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது. ஆனாலும், எனக்காக தாய்க்கு மகன் அளிக்கும் 16 பிண்டங்களுக்கான மந்திரங்களையும் சொல்லட்டுமா… அவற்றை மாத்ரு ஷோடஸி என்கிறார்கள்…” என்றதும் புன்னகைத்து அனுமதி கொடுத்தார் ஞானகுரு.



# மந்திரச்சொல்

> இன்பமோ, துன்பமோ அனுபவிக்கப் போவது நீ. எனவே, முடிவுகளை நீயே எடு.



**1. கர்பஸ்ய உத்கமநே துகம் விஷமே பூமி வர்த்மநி |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”கொஞ்சமா நஞ்சமா நான் உன்னை படுத்தியது. ஒரு பத்து மாத காலம் எப்படியெல்லாம் உன்னை உதைத்திருக்கிறேன். என்னையும் சுமந்தபடி மேடும் பள்ளமுமாக நீ அலைந்தாயே. நான் கொடுத்த கஷ்டத்தை துளி கூட நீ பொருட்படுத்த வில்லை. என்னை திட்டவில்லையே. சந்தோஷமாக என்னை உள்ளே அடக்கிய உன் வயிறை எண்ணற்ற முறை ஆசையாக தடவி கொடுத்தாயே. இதோ நான் செய்த பாவங்களுக்காக உனக்கு இந்த முதல் பிண்டம். பரிகாரமாக ஏற்றுக்கொள்வாயா?

**2. மாஸி மாஸி க்ருதம் கஷ்டம் வேதநா ப்ரஸவே ததா |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”ஏன் சோர்ந்து போயிருக்கிறாய். உன் பிள்ளை உள்ளே படுத்துகிறானா? பிரசவ காலம் கஷ்டமானது தான். மாசா மாசம் நான் வளர வளர உனக்கு துன்பத்தை தானே அதிகமாக கொடுத்துக் கொண்டே வந்தேன். இந்தா அதற்கு பரிகாரமாக நான் இடும் இந்த இரண்டாவது பிண்டம். ஏற்றுக்கொள் அம்மா.

**3. பத்ப்யாம் ப்ரஜாயதே புத்ரோ ஜநந்யா: பரிவேதநம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

அம்மா, நான் அளித்த வேதனையில் நீ பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக்கொண்ட தாங்கமுடியாத துன்பம் நான் உன்னை வயிற்ருக்குள் இருந்தபோது உதைத்தது தானே. அதற்காக ப்ராயச்தித்தமாக இந்த 3வது ஸ்பெஷல் பிண்டம் உனக்கு. என் தாயே.

**4. ஸம்பூர்ணே தசமே மாஸி சாத்யந்தம் மாத்ருபீடநம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”அம்மா, இந்த 4 வது பிண்டம் உனது பூரண கர்ப காலத்தில் நீ என்னால் பட்ட வேதனைக்காக -- ஒரு பரிசு -- என்றே ஏற்றுக்கொள். என்னைப் பொருத்தவரை எனது பிராயச்சித்தம் என்று நான் இடுகிறேன்.

**5. சைதில்யே ப்ரஸவே ப்ராப்தே மாத விந்ததி துஷ்க்ருதம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் |**

”ஏண்டி மூச்சு விடறது கஷ்டமாக இருக்கா. கொஞ்ச காலம் தான் பொறுத்துக்கோ” .என்று உன் உறவுகள், நட்புகள் கேட்குமே. அவ்வாறே மனமுவந்து நான் விளைத்த துன்பத்தை, வேதனையை நீ தாங்கினாயே. அதற்கு பரிகாரம் தான் இப்போது என் கையில் நான் தாங்கும் இந்த ஐந்தாவது பிண்டம். ஏற்றுக்கொள் என் அருமைத் தாயே.”

**6. ’ பிபேச்ச கடுத்ரவ்யாணி க்வாதாநி விவிதா நி ச|**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”குழந்தை வயித்திலே இருக்கும்போது இதெல்லாம் எனக்கு வேண்டாம். அப்புறமா சாப்பிடறேன்” என்று உனக்கு பிடித்ததை எல்லாம் கூட வேண்டாமே என்று உதறினாயே. எனக்காகவே பத்தியம் இருந்தாயல்லவா. நான் நோயற்று வளர, வாழ எத்தனை தியாகம் செய்தாய். நான் உனக்கு செய்த பாவத்திற்கு தான் இந்த ஆறாவது பிண்டம். அம்மா இதற்கு மேல் என்னால் என்ன செய்ய முடியும் சொல்?”

**7. அக்நிநா சோஷயேத்தேஹம் தரிராத்ரோ போஷணேந |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”நான் குவா குவா என்று பேசி பிறந்து சில நாட்கள் தான் ஆகிறது. அப்போது நீ பசியை அடக்கி வெறும் வயிற்றோடு எத்தனை நாள் சரியான ஆகாரம் இன்றி தூக்கமின்றி வாடினாய். எனக்கு மட்டும் பால் நேரம் தவறாமல் கிடைத்ததே. அந்த துன்பத்தை நான் உனக்கு கொடுத்ததற்கு பரிகாரம் தான் இந்த 7வது பிண்டம்..

**8. ராத்ரௌ மூத்ரபுரீஷாப்யாம் க்லிந்ந: ஸ்யாந்மாத்ரு கர்பட |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. கண்ணில் நீரும் சுரக்கிறது. எத்தனை இரவுகள் அசந்து தூங்கும் உன் புடவையை ஈரம் பண்ணியிருக்கிறேன். படவா என்று செல்லமாக தானே சிரித்துக்கொண்டே வேறு துணி எனக்கும் மாற்றினாய். இதற்கு நான் உனக்கு இடும் கைம்மாறு தான் இந்த 8 வது பிண்டம். இதையாவது ஈரமில்லாமல் தருகிறேனே.

**9. ”தயா விஹ்வலே புத்ரே மாதா ஹ்யந்தம் ப்ரயச்ச தி |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”நான் சுகவாசி. எனக்கு எப்போது தாகம், பசி, தூக்கம், எதுவுமே தெரியாது. நீ தான் இருந்தாயே, பார்த்து பார்த்து அவ்வப்போது, எனக்காக நீ இதெல்லாம் செய்தாயே. இந்த பெரிய மனது பண்ணி என்னை வளர்த்த உனக்கு நான் எவ்வளவு துன்பம் தந்திருக்கிறேன். அதற்காக பிராயச்சித்தமாக இந்த 9வது பிண்டம்.

**.10. திவாராத்ரௌ ஸதா மாதா ததாதி நிர்பரம் ஸ்தநம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

”ஒரு சின்ன செல்ல தட்டு என் மொட்டை மண்டையில். ”கடிக்காதேடா..” நான் பால் மட்டுமா உறிஞ்சினேன். என் சிறு பல்லால் உன்னை கடித்தேனே. வலித்ததல்லவா உனக்கு. இந்தா அதற்காக ப்ளீஸ் இந்த பிண்டத்தை ஏற்றுக்கொள் அம்மா

**11. மாகே மாஸி நிதாகே சசிரேத்யந்த து கிதா |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

’’வெளியே பனி, குழந்தைக்கு ஆகாது. இந்த விசிறியை எடு. குழந்தைக்கு உள்ளே வியர்க்கும். வாடைக்காத்து. ஜன்னலை மூடு. எனக்கு காத்து வேண்டாம். குழந்தையைப் போர்த்தவேண்டும். கம்பளி கொண்டுவா. குழந்தைக்கு குளிருமே.” காலத்திற்கேற்றவாறு என்னை கருத்தில் கொண்டு காத்த என் தாயே, நான் பிரதியுபகாரமாக கொடுப்ப தெல்லாம் இந்த சிறு பிண்டம், 11வதாக எடுத்துக்கொள்.’

**12. புத்ரே வ்யாதி ஸமாயுக்தே மாதா ஹா க்ரந்த காரிணி**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

எத்தனை இரவுகள், எத்தனை மன வியாகூலம். குழந்தை நெற்றி எல்லாம் சுடறதே, சுவாசம் கஷ்டமாயிருக்கே. சளி உபாதையாக இருக்கிறதே என்று வருந்தி, நாமக் கட்டி, மஞ்சள், விபூதி, பத்து எல்லாம் தடவி மடியில் போட்டு ஆட்டி, தட்டி, என்னை வளர்த்தாயே, கண்விழித்து உன் உடல் . அதற்காகத்தான் இந்த 12வது பிண்டம் தருகிறேன்.

**13. யமத்வாரே மஹாகோரே மாதா சோசதி ஸந்ததம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

நான் இந்த பூலோகத்தில் இப்போது கார், பங்களா வசதிகளோடு கை நிறைய காசோடு . ஆனால் இதெல்லாம் அனுபவிக்காமல் நீ யமலோகம் நடந்து சென்று கொண்டிருக்கிறாயே. என் கார் அங்கு வராதே. வழியெல்லாம் எத்தனை இடையூறு. அவை எதுவுமே உனக்கு துன்பம் தராமல் இருக்க நான் தர முடிந்தது இந்த 13வது பிண்டம் தான் அம்மா.

**14. யாவத்புத்ரோ ந பவதி தாவந்மாதுச்ச சோசநம் |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

நான் இப்போது, பெரிய டாக்டர், எஞ்சினீயர், வக்கீல், ஜட்ஜ், ஹெட்மாஸ்டர், கம்ப்யூடர் ஸ்பெஷலிஸ்ட் -- நீ இல்லாவிட்டால் நானே எது.? ஏது? ஆதார காரணமே, என் தாயே, இந்த 14வது பிண்டம் தான் அதற்கு பரியுபகாரமாக உனக்கு என்னால் தர முடிந்தது.

**15. ஸ்வல்ப ஆஹாரஸ்ய கரணீ யாவத் புத்ரச்ச பாலக: |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

திருப்பி திருப்பி சொல்கிறேனே. நான் வளரத்தானே நீ உன்னை வருத்திக்கொண்டாய். நீ வேண்டியதை திரஸ்கரித் தாய். நான் புத்தகத்தில் தான் ’தன்னலமற்ற’ தியாகம் என்று படிக்கிறேன். நீ அதை பிரத்யக்ஷமாக புரிந்து அனுபவித்தவள். எனக்காக நீ கிடந்த பட்டினி, பத்தியம் எல்லாவற்றிற்கும் உனக்கு நான் தரும் பிரதிஉபகாரம் இந்த 15வது பிண்டம் ஒன்றே.

**16. காத்ரபங்கா பவேந்மாதா ம்ருத்யு ஏவ ந ஸம்சய |**
**தஸ்ய நிஷ்க்ரமணார்தாய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ||**

நான் சுய கார்யப் புலி. சுயநல விஷமி. உன்னில் நான் உருவாகி, கருவாகி, சிறுவனாகி, பெரியவனாகி, இப்போது உன் மரண வேதனையை சற்றே உணர்ந்தவனாக கண்ணில் நீரோடு தரும் இந்த 16வது கடைசி கடைசி பிண்டத்தை ஏற்றுக்கொள் என் தாயே. தெய்வமே. என்னை மன்னித்து ஆசிர்வதி.

– என்று முடித்தார் மகேந்திரன்.

‘‘இப்படியெல்லாம் உணர்வுபூர்வமாக மனிதனை ஏமாற்றினால்தான் நிறைய பணம் தருகிறான். சரி, இந்த மந்திரங்களையும் தூக்கி குப்பையில் போடு” என்றபடி நகர்ந்தார் ஞானகுரு.



www.gyanaguru.com

# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்ப தற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...



ஞானகுரு மகிழ்ச்சி
**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா
**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ் - கே.எம்.பிரசன்னா
ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜூனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com







# பூனை குறுக்கே போனால்?



வீட்டை விட்டு வெளியே கிளம்பும் போது பூனை குறுக்கே போய்விட்டால் சட்டென அதிர்ந்து விடுகிறார்கள். அது இடமிருந்து வலம் போனதா, வலமிருந்து இடம் போனதா... கருப்புப் பூனையா அல்லது கொஞ்சம் வெள்ளை நிறம் கலந்த பூனையா என்றெல்லாம் பார்த்து, சகுனத்தை கணிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

"பூனை குறுக்கே போனால் என்ன அர்த்தம்?"

"அது எங்கேயோ போகிறது என்று அர்த்தம்..."

ஆம், இது கிண்டல் அல்லது நகைச்சுவை பதில் அல்ல. இதுதான் யதார்த்தம். சாதாரணமாக பூனை எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறது. நீங்களும் எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறீர்கள். அவ்வளவுதான். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்களோ, அதை பொறுத்தே உங்களுக்குப் பலன் கிடைக்குமே தவிர, குறுக்கே செல்லும் பூனையால் அல்லது தலையை தொட்டுச் செல்லும் காகத்தால் எதுவும் மாறிவிடாது.

"அமைதி வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்..?"

"போருக்குச் செல்வதற்குத் தயாராக இரு..."

ஆம், இந்த பதிலும் எதிர்மறை பதில் அல்ல. இதுவே சரியான பதில். ஒருவர் போருக்குச் செல்லும் போது எப்படிப்பட்ட மனநிலையில் இருக்க வேண்டும் தெரியுமா..? எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இருக்க வேண்டும். அதாவது போரில் பிறர் உயிரை எடுக்க வேண்டி வரலாம் அல்லது தன் உயிரை இழக்க வேண்டி இருக்கலாம். அப்படி தன்னையே இழப்பதற்கு ஒருவன் தயாராக இருந்தால், அவன் மனதில் அமைதி தானாகவே வந்துவிடும்.

"என் எதிர்காலத்துக்குப் போதுமான அளவு சேமிக்கவில்லையே..."

"பிச்சைக்காரனாக மாறி விடு..."

ஆம்... இந்த பதில் உன்னுடைய பயத்தை போக்குவதற்காக சொல்லப்படுகிறது. பயம் இருக்கும் ஒருவனுக்கு எவ்வளவு பணம் சேமிப்பாக இருந்தாலும், அதன் மீது நம்பிக்கை வராது. 'நாளைக்கும் பணம் கிடைக்குமா, கிடைக்கும் பணம் போதுமான அளவில் இருக்குமா, வயதான பிறகு வரும் நோய்க்கு இந்த பணத்தால் சிகிச்சை தந்துவிட முடியுமா' என்றெலாம் யோசித்துக்கொண்டே பயத்துடன் வாழ்வார்கள். அவர்களால், சேமித்து வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு சந்தோஷமாக வாழ முடியாது. எனவே, பிச்சைக்காரன் வாழ்க்கைக்கு ஆசைப்பட வேண்டும். நாளை ஏதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. அந்த நம்பிக்கைதான் பணத்தின் மீதான பயத்தை குறைக்கும். பணம் இன்றி உலகில் அத்தனை உயிரினங்களும் வாழத்தான் செய்கின்றன என்பதை நினைவில் கொள்.



www.gyanaguru.com

# ஏழைகள் வாய்விட்டு சிரிக்கிறார்கள்..



கைகளில் இருந்த தானியங்களை பறவை களுக்கு வீசிக்கொண்டு இருந்தார் ஞானகுரு. அப்போது, “சுவாமி... ஒற்றைக் குடிசையிலும், நடைபாதையிலும் வாழும் ஏழைகள் சிரித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டும் மகிழ்ச்சியாக இருப்பதை பார்க்க ஆச்சர்யமாக இருக்கிறது, பூ விற்பனை செய்யும் ஒரு பெண், பால் வாங்கிக்கொண்டு செல்லும் ஒரு பெண்ணை பார்த்து ஏதோ சொல்லி, வாய் விட்டு சிரிக்கிறாள். அவள் வைத்திருக்கும் அத்தனை பூக்களும் இரவுக்குள் விற்பனையாகுமா அல்லது மீந்து போகுமா என்று எனக்கு இருக்கும் கவலை கூட அந்த பெண்ணுக்கு இல்லை... 200 ரூபாய் வருமானத்திற்கே வழி இல்லாத அந்த பெண்ணுக்கு சிரிப்பு எப்படி சாத்தியமாகிறது..?” சந்தேகம் கேட்டார் மகேந்திரன்.

“மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கவலை ஏழைகளுக்கு இல்லை. ஏனென்றால், எல்லா ஏழைகளும் வெளிப்படையாக வாழ்கிறார்கள். பூ விற்பனை செய்யும் பெண்ணின் கடை என்பது ஒரு சிறிய பலகை மட்டுமே. அதை அவள் யாருக்கும் மறைக்கத் தேவை இல்லை. அந்த ரோட்டுக்கு அவளே சொந்தக்காரி போன்று உட்கார்ந்து வியாபாரம் செய்கிறாள். விற்பனை செய்தது போதும் என்று தோன்றிவிட்டால், மீதமிருப்பதை குப்பையில் வீசிவிட்டு போய்க்கொண்டே இருப்பாள். நடுத்தர வர்க்கத்தினரும், பணக்காரரும் பிறருக்காகவே வாழ்கிறார்கள். ரோட்டில் வைத்து சிரித்தால் அவமானம் என்று நினைக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நடுரோட்டில் நின்று பேசுவதையே அவமானம் என்று நினைப்பவர்கள் உண்டு. அவர்கள் சிரிப்பதற்கு ஒரு நிகழ்ச்சி அல்லது தனி அறை தேவைப்படுகிறது. அதனால், ரோட்டில் தெரிந்தவர்களை பார்க்க நேர்ந்தாலும், ஒரு மில்லிமீட்டருக்கு மேல் புன்னகைக்க மாட்டார்கள். அதுவே, நாகரிகம் என்று மனதை பூட்டிக் கொள்கிறார்கள். இப்படி யோசனை செய்துதான் சிரிக்க வேண்டும் என்று நினைப்பதால், ஒரு கட்டத்தில் சிரிப்பு என்பதை மறந்தே போகிறார்கள்.

ஏழைகளுக்கு அப்படி எந்த கட்டுப்பாடும் இல்லை. ரோட்டில் வைத்து பூ வியாபாரம் செய்பவள், வீடும் ஒற்றைத் தடுப்பாகத்தான் இருக்கும். அவள் பேசுவதை அக்கம்பக்கத் தினரும் கேட்கத்தான் செய்வார்கள். எனவே, எல்லா இடத்தையும் அவள் சொந்த வீடாக, எல்லா இடத்தையும் அவள் சிரிக்கும் இடமாக எடுத்துக் கொள்கிறாள்.

பெரும்பாலான ஏழைகள் போதும் என்ற மனநிலைக்கு பழகிவிடுகிறார்கள். எது கிடைத்தாலும் அதற்காக மகிழ்ச்சி அடைகிறார்கள். நாளையும் இப்படி ஏதேனும் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் வாழ்கிறார்கள். மகிழ்ச்சி அடைவதற்குக் கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அவர்கள் தவற விடுவதில்லை. துன்பத்திலும் மகிழ்ச்சியைக் கண்டடை கிறார்கள். அதனால்தான், ஏழைகள் வீட்டில் மரணம்கூட கொண்டாட்டமாகிறது. அதேநேரம், எல்லா ஏழைகளும் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள், எல்லா ஏழைகளும் சிரிக்கிறார்கள் என்றும் அர்த்தம் இல்லை. கொலை, கொள்ளை போன்ற செயல்களில் பலரும் இறங்குவதற்கு ஏழ்மையே முக்கிய காரணமாக இருக்கிறது. அந்த மனநிலையில் இருப்பவர்கள் மகிழ்வுடன் இருப்பதில்லை. அவர்கள் மகிழ்ச்சிக்கு குடி, புகை என்று மாறிவிடுகிறார்கள். பணக்காரர்களும் நடுத்தர மக்களும் மகிழ்ச்சியைத் தேடி வருடம் ஒரு முறை சுற்றுப்பயணத்துக்கு திட்டம் போடுகிறார்கள். ஆனால், ஏழைகள் அப்படியெல்லாம் சிரிப்பதற்குத் திட்டமிடுவது இல்லை.

அதேநேரம் ஏழ்மைக்கும் மகிழ்ச்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போதும் என்ற மனமும், பிறர் என்ன நினைக்கிறார்கள் என்ற கவலையும் இல்லாத கோடீஸ்வரனும் எல்லா நேரத்திலும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்...” என்றார் ஞானகுரு.

இந்த பதிலே மகேந்திரனுக்கு போதுமானதாக இருந்தது.

## மந்திரச்சொல்

“பொருட்களை
பயன்படுத்துங்கள்
நேசிக்காதீர்கள்...
மனிதனை நேசியுங்கள்
பயன்படுத்
தாதீர்கள்...”

# அதிர்ஷ்ட கோட்பாடு



அதிர்ஷ்டம் என்ற ஒன்று இந்த உலகில் இல்லவே இல்லை, கடும் உழைப்பும் முயற்சியுமே வெற்றி தரும். அந்த வெற்றியை பெற முடியாத சிலர், அதனை அதிர்ஷ்டம் என்று அழைக்கிறார்கள்.

அதேநேரம், நம்முடைய வாழ்க்கை மட்டும் ஏன் இத்தனை சிக்கலாக இருக்கிறது என்ற கேள்வி எழாத மனிதன் யாரும் இந்த உலகில் இல்லை. அதுபோன்ற எண்ணம் உங்கள் மனதை அரிக்கும்போது, நீங்கள் இந்த அதிர்ஷ்ட கோட்பாட்டை கடைபிடித்துப் பார்க்கலாம். ஆம், இதைப் படிப்பதால், சட்டென்று மனசுக்குள் ஒரு பூ மலர்வது நிச்சயம்.

- எந்த நோய் அறிகுறியும் இல்லாமல் காலையில் எழுந்திருக்கிறாயா..? படுக்கையில் எழுந்தரிக்காமலே உயிர் துறந்த பலரை விட நீ பாக்கியசாலி.
- படுத்த அரை மணி நேரத்துக்குள் தூங்கிவிடுகிறாயா..? நீ இந்த உலகிலுள்ள 50% மனிதர்களைவிட நிம்மதியாகத் தூங்கும் வாய்ப்பு பெற்றவன்.
- நல்ல பார்வையும், செவித் திறன், வாய் பேசாமை உள்ளிட்ட எந்த குறைபாடுகளும் உனக்கு இல்லையா..? உலகில் உள்ள 20 கோடி மக்களை விட நீ நல்ல நிலையில் இருக்கிறாய்.
- மூன்று வேளை உணவு, நல்ல உடைகள், தங்குவதற்கு வீடு இருக்கிறதா..? இந்த உலகிலுள்ள 75% மக்களை விட நீ வசதியானவன்.
- உனக்கு வங்கியில் கொஞ்சமாவது பணம் இருக்கிறதா..? அப்படியென்றால் நீயும் ஒரு பணக்காரன். ஆம், உலகில் உள்ள 70% மக்களுக்கு வங்கிக் கணக்கே இல்லை.
- உன்னிடம் ஒரு கம்ப்யூட்டர் இருக்கிறதா..? இந்த உலகிலுள்ள 95% மனிதர்களுக்கு பிரத்யேக கம்ப்யூட்டர் இல்லை. எனவே, நீ பெரும்பேறு பெற்றவன்.
- தோழன் அல்லது தோழியுடன் போய் டீ அல்லது குளிர்பானம் சாப்பிடுகிறாயா..? அடேங்கப்பா, உலகிலுள்ள 100 கோடி மக்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைப்பதே இல்லை.
- தினமும் ஒரு முறையாவது சிரிக்கிறாயா..? இந்த உலகில் 50% பேர் ஒரே ஒரு முறைகூட சிரிக்க முடியாத அளவுக்கு துக்கத்தில் இருக்கிறார்கள்.
- உன் நாட்டில் உள் நாட்டுப் போர் அல்லது வெளிநாட்டுப் போர் நடக்கவில்லையா..? அப்படி அவஸ்தைப்படும் 30 கோடி மக்களைவிட உனக்கு சுதந்திரம் உள்ளது.
- உன்னிடம் பேசுவதற்கு நெருங்கிய உறவினர்கள் யாரேனும் இருக்கிறார்களா..? அப்படி இல்லாமல் வெளிநாடுகளில் வசிக்கும் 20 கோடி மக்களைவிட நீ பாக்கியவான்.
- உனக்கு பிடிக்கவில்லை என்றாலும் வேலை செய்கிறாயா..? வேலை கிடைக்காத 50 கோடி மக்களைவிட உனக்கு நல்லதே நடந்துள்ளது.

இதுபோன்று, நமக்குக் கீழே உள்ளவர்கள் பற்றி ஒரே ஒரு கணம் சிந்தித்தால் போதும், நாம் எத்தனை அதிர்ஷ்டசாலி என்பதை உணர முடியும். இருப்பதைக் கொண்டு அனுபவிப்பதுதான், உண்மையான மகிழ்ச்சி.

**மந்திரச்சொல்**

“கொடுப்பவரை ஏழை ஆக்காமல், பெறுபவரை செல்வந்தன் ஆக்கும் ஒரே செயல் புன்னகை.”



www.gyanaguru.com



www.gyanaguru.com



# ஒரே ஒரு வார்த்தை போதும்

இந்த உலகிலேயே மோசமான ஆயுதம் எது என்று கேட்டால், தயங்காமல் சட்டென்று சொல்ல முடியும்.

நாக்கு.

ஆம், நாக்கை விட வலிமையான ஆயுதம் வேறு எதுவும் இல்லை. ஒரே ஒரு வார்த்தையில் உயிரை விட்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு. ஒரே ஒரு வார்த்தைக்காக ஏங்கியவர்கள் எத்தனையோ பேர் உண்டு. வார்த்தை கொல்லவும் செய்யும், வெல்லவும் செய்யும்.

எனவே, பேசும் வார்த்தையில் கவனம் வைப்பது மிகவும் முக்கியம். வள்ளுவன் சொன்னது போன்று, நாக்கினால் சூடு போடக்கூடாது. நாம் பேசும் வார்த்தைகள், பிறருக்கு அன்பு தருவதாக, ஆறுதல் தருவதாக, துயரம் போக்குவதாக, நம்பிக்கை தருவதாக இருக்க வேண்டும்.

பேசும் வார்த்தைக்கு உயிர் இருக்க வேண்டும். அதாவது, உண்மையான உணர்ச்சியுடன் பேச வேண்டும். அப்போதுதான், பேச்சின் மூலம் ஒருவரை தொட முடியும். கனிவான வார்த்தைகள் உயிரைக் காக்கும். கருணையான வார்த்தைகள் காலம் அறிந்து சொன்ன வார்த்தைகள் துன்பத்தை தவிர்க்கும்.

தன்னம்பிக்கை வார்த்தைகள் மனச்சோர்வை விரட்டும். நகைச்சுவை வார்த்தைகள் மன இறுக்கத்தைத் தளர்த்தும். பண்பான வார்த்தைகள் இதயத்தைத் தொடும். பணிவான வார்த்தைகள் மரியாதையைக் கூட்டும். பொறுமையான வார்த்தைகள் கோபத்தை விரட்டும். மன அழுத்தத்தைக் குறைக்கும். வாழ்த்துகின்ற வார்த்தைகள் வசந்தத்தைக் கொடுக்கும்.

ஒரு யுத்தத்தை வார்த்தைகளால் தொடங்க முடியும். முடித்து வைக்கவும் முடியும். சில வார்த்தைகள் கசக்கும். சில வார்த்தைகள் இனிக்கும். சில வார்த்தைகள் இருட்டைப் போக்கும். சில வார்த்தைகள் மயில் இறகு போல் இதமாக இருக்கும்.

ஒரு ஆட்டோ முதுகில் எழுதப்பட்ட வாசகம், 'உங்களின் வழிச் செலவு, எங்களின் வாழ்க்கை செலவு.' – இந்த வாசகத்தைப் படித்தவர்களால், பேரம் பேச மனம் வராது. மீட்டருக்கு மேல் ஐந்து ரூபாய் போட்டுக் கொடுங்க சார் என்கிற வார்த்தைக்கும் இந்த வாசகத்திற்கு எத்தனை வேறுபாடு..?

ஒரு மொத்த விற்பனை மீன் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம், 'மீன் சாப்பிட வேண்டாம் என்று நினைத்தேன். மீனவன் சாப்பிட வேண்டாமா?'

இதை பார்த்தவுடன் புன்னகை வருகிறதல்லவா..? அதுதான் முக்கியம். வார்த்தைகளில் இல்லை வெற்றி. அது வெளிவரும் விதத்தில் தான் வெற்றி இருக்கிறது. எனவே, நினைக்கும் விஷயங்களை எல்லாம் பேசாமல், அதை செம்மை படுத்தி பேசிப்பாருங்கள்.. வெற்றி நிச்சயம்.

ஒரு ஹோட்டலில் எழுதி மாட்டி இருக்கும் வாசகம்...

'வீட்டு சமையலுக்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள்.'

எண்ணங்கள் அழகானால் வார்த்தைகள் அழகாகும், வார்த்தைகள்

www.gyanaguru.com



# மந்திரச்சொல்

> மகிழ்ச்சியாக இருப்பதற்கு மந்திரங்கள் தேவையில்லை, சில மறதிகளே போதுமானது.

அழகானால் வாழ்க்கையே அழகாகும். இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய் ஒரு நாள் மாஸ்கோ நகர வீதியில் நடந்து சென்று கொண்டு இருந்தார். அவருக்கு எதிரே வந்த ஒரு பிச்சைக்காரர், “எஜமானே,,, எனக்கு எதாவது உதவி செய்யுங்கள்,உணவு சாப்பிட்டு இரண்டு நாட்களாகி விட்டது” என்று உண்மையான பசியுடன் கேட்டான்.

ஆனால் அப்போது டால்ஸ்டாய் நிலைமையும் அப்படித்தான். அவரிடமும் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. எனவே அந்த பிச்சைக்காரரிடம் மிகவும் கனிவான குரலில், ‘அன்பு சகோதரனே... என்னை மன்னித்துவிடு. என்னிடம் நீ கேட்கும் உதவியை செய்வதற்கு பணம் எதுவும் இல்லை’ என்றார் உண்மையான வருத்தத்துடன். .

அவரது வார்த்தையை கேட்ட பிச்சைக்காரர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். “மிகவும் நன்றி எஜமானே... நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்” என்று சொன்னான்.

டால்ஸ்டாய்க்கு குழப்பம் வந்துவிட்டது. நாம் எதுவுமே தரவில்லை. ஆனால், அவரோ ஏதோ வாங்கியவர் போன்று மகிழ்ச்சி அடைகிறாரே என்று யோசித்து, அதை அவரிடமே கேட்டார்.

‘எஜமானே, என்னை எல்லோரும் ஒரு சாதாரண மனிதனாகக்கூட கருதுவதில்லை. நீங்களோ சகோதரனே என்று அழைத்தீர்கள். பரிவுடன் உங்கள் நிலவரத்தைச் சொன்னீர்கள்... நீங்கள் என்னிடம் எதுவும் பேசாமலே போயிருக்க முடியும். என்னை மதித்து என் கோரிக்கையை ஏற்க முடியவில்லை என்று வருத்தப்பட்டீர்கள். அது நீங்கள் எனக்கு கொடுத்த விலை மதிக்க முடியாத வெகுமதி’ என்று சிரித்தார். எனவே, வார்த்தைகளை கச்சிதமாக பயன்படுத்துங்கள். எல்லா வார்த்தைகளும் பிறருக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சியைத் தரட்டும்.







# கவித்துவம்

தன் குழந்தைக்கு
பொம்மை
வாங்க முடியாது
எனத் தெரிந்து
பேரம் பேசி
வெளியேறப் பார்க்கிறார்
அப்பா
பாசம் உணர்ந்து
கட்டுபடியாகும் பேரத்துக்கு
படிய வைத்து
விற்கப் பார்க்கிறார்
கடைக்காரர்
பொம்மைப் பார்க்க
போராடுகின்றனர்
இருவரும்.

\- ராஜா சந்திரசேகர்

# உண்மை என்பது

## உண்மையன்றி, வேறில்லை..!

சுந்தர ராமசாமி

எல்லாவற்றையும் நன்றாகப் பார்க்க அது அதற்கான இடைவெளி தேவைப்படுகிறது. சில சமயம் தூரத்தின் இடைவெளி, சிலசமயம் காலத்தின் இடைவெளி.

- சுந்தர ராமசாமி



எழுத்தாளர் சுஜாதா

'யாருமே சாவதில்லை'. இது என் அம்மா இறந்தபோது அப்பா சொன்னது. 'அவள் இறந்ததாக நான் ஏன் எண்ணிக்கொள்ள வேண்டும்? அவள் குரல் என் பேத்தியிடம் இருக்கிறது. அவள் சாயல் உன்னிடம் இருக்கிறது. குணம், பிடிவா தங்கள், அழகு, டயபடிஸ் எல்லாவற்றையும் அங்கங்கே பாகம் பிரித்துக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறாள். அவள் நினைவுகள் நம் எல்லோரிடமும் உள்ளது' என்று சொல்வார். Life goes on. இந்த அதீதமான சோகத்தை மறக்க, சீக்கிரமே அன்றாடப் பணிக்குத் திரும்புவது முக்கியம். அதையே நினைத்துக்கொண்டு மறுகினால், எண்ணங்கள் நம்மைச் சாப்பிட்டுவிடும்.

- எழுத்தாளர் சுஜாதா



புத்தர்

எவையெல்லாம் உன்னுடையது இல்லையோ, அவற்றை யெல்லாம் உன்னிடமிருந்து விடுதலை செய். நீ கொடுக்கின்ற விடுதலை தான், வரப்போகிற காலத்தில் உனது மகிழ்ச்சிக்கான பாதை.

- புத்தர்



ஓஷோ



யார் உங்களை நேசித்தாலும் யார் உங்களை வெறுத்தாலும் உங்களை எந்த விதத்திலும் பாதிக்காமல் பார்த்து கொள்ளுங்கள். ஏனெனில் நேசிப்பதும் வெறுப்பதும் அவர்கள் பிரச்சினை உங்களுடையது அல்ல.

- ஓஷோ

கோ.சாமான்யன்

உங்களை எதுவொன்று அழ வைக்கிறதோ, அடிமைபடுத்துகிறதோ, பிரக்ஞையற்று திரியச் செய்கிறதோ,புலம்ப விடுகிறதோ அதனை அன்பென்று பெயரிடுங்கள். அன்பு ஆபத்தான மிருகம் பழக்கி வைத்தாலும் உயிர் பருகியே தீரும்.

- கோ. சாமான்யன்



ஜெயகாந்தன்



ஒவ்வொருவரும் எல்லாருக்கும் பிடிக்க வேண்டும் என்று எண்ணியே காரியமாற்றுகிறார்கள். ஆனால், அதில் யாருமே முழு வெற்றி காண்பதில்லை. காண முடிவதில்லை; காண்பதிலும் சிறப்பில்லை.

- ஜெயகாந்தன்

வழிப்போக்கன்

எந்த சித்தாந்தங்களுக்குள்ளும் சிக்காத எந்த தத்துவங்களுக்குள்ளும் அடங்காத மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறோம் கருணையற்ற இந்த காலப்பெரு வெள்ளத்தில்.

- வழிப்போக்கன்



ஜே.கே

மனம் அனுபவிப்பதை (experience) நிறுத்தும் வரை தெரியாததை அனுபவித்தல் (experiencing) என்பது சாத்தியமாகாது.

- ஜே.கே





# தள்ளிப் போடு தள்ளிப் போடாதே

இதிகாசங்கள் உண்மையா அல்லது கற்பனயா என்ற சர்ச்சைக்குள் நாம் செல்ல வேண்டியதில்லை. ஆனால் என்ன படித்தாலும், அதிலிருக்கும் நல்ல சாரம்சங்களை எடுத்துக்கொள்வது வாழ்க்கைக்கு மகிழ்ச்சி தரும்.

அப்படித்தான் ராமாயணத்தில் ஒரு அற்புதமான தருணம். ராமன் செலுத்திய அம்பில் காயம்பட்டு குற்றுயிராய்க் கிடக்கிறான் ராவணன். எந்த நேரமும் அவனுடைய உயிர் பிரிந்துவிடும் என்ற நிலை.

அப்போது லட்சுமணனை அழைத்த ராமன், ‘தம்பி... ராவணன் அனைத்துக் கலைகளையும் அறிந்தவன். ஒரு நாட்டை சிறப்பாக ஆட்சி புரிந்தவன். நமக்கு அவனுடைய அரசியல் அனுபவம் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். நீ அவனிடம் போய் அறிவுரைகளைப் பெற்று வா’ என்று கூறி அனுப்பினார்.

லட்சுமணன் பவ்யமாக ராவணனின் காலடியில் போய் நின்றான். ‘இலங்கேஸ்வரா உன்னுடைய ஞானம் உன்னோடு அழிந்துவிடக்கூடாது. நீ எனக்கு உபதேசிப்பதன் மூலம் அதை இந்த உலகம் அறிந்து பயன் பெறும். எனவே எனக்கு உபதேசிக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டான்.

மரண தருவாயில் தன்னை மதித்து வந்திருக்கும் லட்சுமணனிடம் மகிழ்ச்சியோடு பேசத் தொடங்கினான் ராவணன். ‘‘லட்சுமணா ஒரு காலத்தில் சர்வ வல்லமை படைத்தவனாக நான் இருந்தேன். நவக்கிரகங்களும் எமனும் இந்திரனும் கூட எனக்குக் கீழ்ப்படிந்தனர். அப்போது நான் எண்ணியது என்ன தெரியுமா?

நாட்டில் அனைவரும் சொர்க்கம் செல்ல வேண்டும். நரகம் யாருக்கும் இல்லையென உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒரு பறக்கும் ஏணி அனைவரையும் ஏற்றிச் செல்ல எமனைக் கொண்டே உருவாக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால் இந்த நல்ல எண்ணத்தைச் செயல்படுத்தாமல் தள்ளிப் போட்டேன். அதன் விளைவாகவே இன்று நான் அவதிப்பட்டேன்.

சூர்ப்பனகை வந்து சீதாதேவி அழகின் சிகரம். அவள் உனக்கு ஏற்றவள் என்று கூறியதும் உடனே சீதையை அபகரிக்கும் செயலை தள்ளிப் போடாமல் புறப்பட்டேன். விளைவு, எல்லாமே நாசம்.

அதனால் நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது, ‘ நல்ல செயலை உடனடியாக செய்து முடி அது பலன் தரும். தீய செயலைத் தள்ளிப் போடு தள்ளிப்போடுவதால் அந்த தீய செயல் நடைபெறாமல் இருக்க வாய்ப்புண்டு’ என்பதுதான்.

அதேபோல், தொடர்ந்து நீ வெற்றிவாகை சூடினாலும் எப்போதும் வெல்வோம் என்று எண்ணாதே. யாரையும் குறைவாக எடை போடாதே. நான் அனுமனை சிறியவன் என்று எடை போட்டுவிட்டேன். அப்போதே அவன் வலிமையை அறிந்திருக்க வேண்டும்.

உன் குற்றங்களை சுட்டிக் காட்டும் நண்பனை நம்பு. பொறுமையைவிட மேலான தவமுமில்லை. திருப்தியை விட மேலான இன்பமுமில்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை” என்று கூறிவிட்டு இந்த உலகைவிட்டு விடை பெற்றான்.

எந்த வேலையை உடனே செய்ய வேண்டும், எதை தள்ளிப் போட வேண்டும் என்று தெரியாமல்தானே, இந்த உலகில் பலரும் தப்புத்தப்பாக தப்பு செய்கிறார்கள். இந்த விஷயத்தில் ராவணன் சொல் கேட்கலாமே...

www.gyanguru.com

www.gyanguru.com



ஆழ்மனமே தாழ் திறவாய்!

# கொஞ்சம் அஜித் கொஞ்சம் விஜய்

## அத்தியாயம்-12

‘எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே...’ என்ற பிரபலமான பாடலைக் கேட்டிருப்பீர்கள்.

இது உண்மையா..?

ஏனென்றால் அன்னைக்கு மூன்று குழந்தைகள் என்றால், மூவரிடமும் சமமாகவே அன்பு செலுத்துவாள். எந்த பாகுபாடும் பார்க்கமாட்டாள். அந்த மூன்று பிள்ளைகளும் உருவத்தில்கூட ஒரே மாதிரி இருக்கலாம். ஆனால், குணத்தில் நிச்சயம் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒருவர் சாந்தமானவராக, ஒருவர் கோபக்காரராக, ஒருவர் பக்திமானாக என்று ஆளுக்கு ஒரு பண்புகளுடனே இருக்கிறார்கள். மூவருக்கும் ஒரே மாதிரி உணவு பிடிப்பதில்லை, மூவருக்கும் ஒரே மாதிரியான ரசனை இருப்பதில்லை.

இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா?

ஒவ்வொருவரும் அவருடைய மனதுக்கு என்ன பிடிக்கிறதோ, அதையே தன்னுடைய குணமாக, பண்புகளாக அமைத்துக் கொள்கிறார்கள். ஏனென்றால், எந்த ஒரு விஷயத்தையும் ஒவ்வொருவரும் தனிக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். நடைபெறும் ஒரே விஷயத்தை நேர்மறையாகப் பார்ப்பவர்களும் உண்டு, எதிர்மறையாக பார்ப்பவர்களும் உண்டு. மழை பெய்வதைக் கண்டு சந்தோஷப்படுபவர்களும் உண்டு, இந்த நேரத்தில் ஏன் இப்படி கொட்டுது என்று சலிப்பவர்களும் உண்டு.

அதேபோல், அப்பா குடிகாரராக இருந்தால் பிள்ளையும் குடிகாரனாக வளர்வது சகஜம். அப்பா குடிப்பதை மகன் சாதகமாக எடுத்துக்கொண்டு, அவனும் சிறு வயதிலேயே குடிகாரனாக மாறிவிடுகிறான். ஆனால், அப்பாவின் குடிப்பழக்கத்தால் வீட்டில் நிகழும் அன்றாட பிரச்னைகள், அவமானங்கள், உடல்நலக் கோளாறுகள் போன்றவைகளைப் பார்த்து வெறுப்படைந்து, அதனை பாடமாக எடுப்பவரும் உண்டு. அதன்படி, ‘நான் என் வாழ்க்கையில் குடிக்கவே மாட்டேன், என் அப்பாவைப் போல் தவறு செய்ய மாட்டேன்’

ஒரு திரைப்படம் என்றால் வன்முறை இருக்கும்; காதல் இருக்கும்; நகைச்சுவை இருக்கும்; பாடல்கள் இருக்கும் இவற்றில் நமக்கு எது வேண்டுமோ அதை மட்டும் எடுத்துக்கொண்டு நகர வேண்டுமே தவிர, சினிமாவை ஒட்டுமொத்தமாக குறை சொல்வது சரியல்ல.

என்று முடிவு செய்து, நல்லவராக வளரும் பிள்ளைகளும் உண்டு. ஆம், ஆழ் மனதுக்கு ஒருவர் என்ன செய்தி அனுப்புகி றாரோ, அதுவே பழக்கமாகவும், குணமாகவும் மாறிவிடுகிறது.

சுற்றுப்புறம், உறவுகள், பள்ளி, பொருளாதாரம், பெற்றோர் கவனிப்பு, அக்கம்பக்க நிகழ்வுகள், தொலைக்காட்சி, சினிமா போன்ற எல்லாமே மூன்று சகோதரர்களுக்கும் ஒரே மாதிரி கிடைத்தாலும், கிடைக்கும் அனுபவங்களை அவரவர் எண்ணங்களுக்கு ஏற்பவே புரிந்துகொள்கிறார்கள், அவரவர் மனதுக்கு எது விருப்பமோ, அந்த வகையில் எடுத்துக்கொள் கிறார்கள். ஒரே சூழலில் இருக்கிறார்கள் என்றாலும், ஒவ்வொருவரும் அவரவருக்கான வாழ்க்கையை வெவ்வேறு விதமாக எடுத்துக்கொண்டு வளர்கிறார்கள், வாழ்கிறார்கள்.

வடிவேலுவின் நகைச்சுவை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நேரத்தில், எவரேனும் ஒருவர் வாய் விட்டு சிரிப்பார். ஒருசிலர் புன்னகைப்பார். இன்னும் ஒரு சிலர், ‘இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது’ என்ற ரீதியில் நகர்வார். எல்லாவற்றையும் ரசித்து வாழ வேண்டும் என்று மனதில் நினைப்பவர் சிரிக்கிறார். எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், தேவையின்றி பிறர் முன்பு சிரிக்கக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் இருப்பவர் சிரிக்காமல் நகர்கிறார்.

அப்படித்தான், தொழில், உறவு, ஜாதி, மதம், மொழி, இனம் போன்றவைகளில், ஒவ்வொரு நபரும் வெவ்வேறு வகையில் அபிப்பிராயம் வைக்கிறார்கள். வாழ்க்கையில் அவர்கள் பார்த்த, கேட்ட, படித்த அனுபவங்களின் அடிப்படையில் ஜாதி, மதம், இனம், மொழி, உறவு, நேசம் போன்றவற்றை அணுகுகிறார்கள்.

வாழ்க்கையில் கிடைத்த தோல்விகளை, ஏமாற்றங்களை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டு, முன்னேறுபவர்கள் வெற்றியை நோக்கி நகர்கிறார்கள். தோல்வி கிடைக்கும் என்று அஞ்சுபவர்கள் பயணிக்காமலே இருப்பதுண்டு. எனவே, எல்லா நேரமும் நல்ல எண்ணங்களை மட்டுமே மனதில் நினைக்க வேண்டும். நம்மைச் சுற்றி எத்தனை தீயவை நடந்தாலும், கெட்டவை நிகழ்ந்தாலும், அவற்றையும் நன்மையாக மாற்றிக்கொள்ள வேண்டும். .

இதற்கு ஒரு கழுதை கதையை உதாரணமாகச் சொல்லலாம்.

தன்னுடைய தோட்டத்தில் பக்கத்து வீட்டு கழுதை நுழைவதைக் கண்ட மகேந்திரன், அதனை விரட்டுவதற்கு முயற்சி செய்தார். அவர் கம்பை எடுத்து விரட்டியதும் மிரண்டு ஓடிய கழுதை, அவருடைய வீட்டிலிருந்த ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் விழுந்துவிட்டது.

’கழுதையை வேண்டுமென்றே கிணற்றுக்குள் தள்ளிவிட்டதாக பக்கத்து வீட்டுக்காரன் சண்டைக்கு வருவான், கழுதைக்கு கால் உடைந்திருந்தால் நஷ்ட ஈடு கேட்பான்’ என்று மகேந்திரன் பயந்து போனார். அப்போதுதான் அவருக்கு ஒரு யோசனை வந்தது. அதாவது, நீண்ட நாட்களாகவே அந்த கிணற்றை மூட வேண்டும் என்ற எண்ணத்தில் இரண்டு லோடு மண் அடித்துப் போட்டி ருந்தார். அதனை உள்ளே அள்ளிப்போட நேரமில்லாமல் இத்தனை நாட்களாக தள்ளிப் போட்டுக்கொண்டே இருந்தார்

அந்த எண்ணத்தை இப்போது நிறைவேற்றலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதாவது, மண்ணை போட்டு கிணற்றை மூடுவதன் மூலம் கழுதையும் உள்ளேயே புதைந்துவிடும். கிணறும் மூடிவிடும். இந்த பிரச்னையில் இருந்து நாம் தப்பிவிடலாம் என்று நினைத்தார்.

உடனே மண் வெட்டியை எடுத்துக்கொண்டு வந்து மளமளவென மண்ணையும் கல்லையும் பாழடைந்த கிணற்றுக்குள் தள்ளினார். மண்ணை தள்ளிக்கொண்டே இருந்தவர், ஒரு கட்டத்தில் கிணற்றை எட்டிப் பார்த்து ஆச்சர்யமானார்.

ஆம், இவர் போட்ட மண் மீது ஏறி, ஏறி கழுதை ஜம்மென்று கிணற்றிலிருந்து வெளியே வருவதற்குத் தயாராக வெகு பக்கத்தில் இருந்தது. இந்த கழுதை போன்ற நம்பிக்கையே மனிதருக்கு அவசியம்.

தன்னை உயிருடன் புதைப்பதற்காக மண் கொட்டப்படுகிறது என்று கழுதை நினைத்திருந்தால், நின்ற இடத்திலேயே நின்று, கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் மூழ்கி செத்துப் போயிருக்கும். ஆனால், இந்த மண் தன்னை காப்பாற்றுவதற்காக போடப்படுகிறது என்று நம்பியது. அதனால், அதன் மீது ஏறி, ஏறி நின்று உயிர் தப்பியது.



இப்படித்தான், குறை சொல்பவர்கள், வசையாளர்கள், புறம் சொல்பவர்கள், அவநம்பிக்கையாளர்கள், ஏமாற்றுபவர்கள் சுற்றி நிற்கத்தான் செய்வார்கள். அவர்களுடன் இணைந்தே நாம் வாழத்தான் வேண்டும். அவர்களை சகித்துக்கொள்வதும் வாழ்க்கையின் ஒரு பகுதியே. அதேநேரம், அவர்களுடைய கெட்ட எண்ணமும் கருத்தும் நம் ஆழ்மனதை அசைத்துவிடக் கூடாது. யாரேனும் ஒருவர் அவநம்பிக்கை விதைப்பதாக தெரிந்தால், அவருடன் பேச்சுவார்த்தையை வளர்க்காமல் நறுக்கென சுருக்கிக்கொண்டு நகர்ந்துவிட வேண்டும்.

தினமும் கொலை நடக்கத்தான் செய்யும். விபத்து நடக்கத்தான் செய்யும் அதற்காக பயணம் செய்யாமல் இருந்துவிட முடியுமா?

ஒரு திரைப்படம் என்றால் வன்முறை இருக்கும்; காதல் இருக்கும்; நகைச்சுவை இருக்கும்; பாடல்கள் இருக்கும் இவற்றில் நமக்கு எது வேண்டுமோ அதை மட்டும் எடுத்துக்கொண்டு நகர வேண்டுமே தவிர, சினிமாவை ஒட்டுமொத்தமாக குறை சொல்வது சரியல்ல.

‘சினிமாவை பார்த்து கொள்ளை அடித்தேன்... சினிமாவை பார்த்து கொலையை மறைத்தேன்’ என்று குற்றவாளிகள் ஒப்புதல் வாக்குமூலம் தருவது உண்டு. அதற்காக சினிமாவை தடை செய்ய முடியாது. ஏனென்றால், எத்தனையோ மனிதர்களுக்கு சினிமா ஒரு நல்ல தோழனாக, பொழுதுபோக்காக, ரசனையாக இருக்கிறது.

இன்னும் நிறைய பேர் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல் தோற்றுப் போவதற்கு காரணமாக இருப்பது, மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது. ’அம்மா வீட்டில் ராணி போல இருந்தோம், திருமணம் ஆனதும் வேலைக்காரி போன்று கணவன் வீட்டில் இருக்க வேண்டுமா?’ என்று ஒரு பெண் நினைத்தால், அந்த திருமணம் நிச்சயம் விவாகரத்தில் போய் முடிந்துவிடும்.

’அம்மா வீட்டில் எந்த பொறுப்பும் இல்லாமல் துள்ளித் திரிந்தோம். இனியும் அப்படி இருக்க முடியாது. கணவன் வீட்டை சீரமைக்கும் கடமை இருக்கிறது. நமது எதிர்காலத்தை நல்ல வகையில் தீர்மானிக்க வேண்டும்’ என்றெல்லாம் ஒரு பெண் நினைத்துவிட்டால், அவள் வாழ்க்கையில் எத்தனை சிக்கல்கள் எழுந்தாலும், அதனை எதிர்த்துநின்று வெற்றிகொள்ளும் பக்குவம் பெற்றுவிடுவாள். அப்படியொரு மாற்றத்தை ஏற்றுக்கொள்வதில்தான் உண்மையான வெற்றி இருக்கிறது.

நாம் எத்தனையோ மாற்றங்களை எதிர்பார்க்கலாம். ஆனால், நாம் விரும்பியபடி மாற்றங்கள் நிகழ்வது இல்லை.

உதாரணமாக தனக்கு அஜித் போன்று அழகாக, விஜய் போன்று எனர்ஜியாக, சிவகார்த்திகேயன் போன்று நகைச்சுவை உணர்வுடன் கணவன் அமைய வேண்டும் என்று ஒரு பெண் ஆசைப்படுவதில் தவறு இல்லை. ஆனால், அப்படி ஒருவரை தேடுவதில் அர்த்தமில்லை. அமைவதற்கும் வாய்ப்பு இல்லை.

அதேநேரம், கொஞ்சம் விஜய், கொஞ்சம் அஜித், கொஞ்சம் சிவகார்த்திகேயன் ஒவ்வொரு ஆணிலும் ஒளிந்து இருப்பதை பெண்ணால் கண்டுபிடிக்க முடியும். இதுதான், மாற்றத்தை ஏற்றுக்கொள்தல். தனக்குப் பிடித்தவரை அஜித்தாக நினைத்துவிட்டால், மனம் நிறைவடைந்துவிடும்.

**மந்திரச்சொல்**

“வார்த்தைகளுக்கு
உருவம் கிடையாது.
ஒருவரது இதயத்தை
மகிழ்விக்கவும்,
துன்பப்படுத்தவும்
வார்த்தைகளால்
முடியும்.”

திருமணம் முடித்து மனைவியின் வீட்டுக்குப் போகும் கணவன், அங்கே எல்லோரும் தரையில் அமர்ந்து சாப்பிடும் பழக்கத்தைப் பார்க்கிறான். அவன் ஒருபோதும் தரையில் அமர்ந்து சாப்பிட்டவன் இல்லை என்றாலும், சட்டென தரையில் அமர்ந்து மாற்றத்தை ஏற்றுக்கொண்டால், அந்த குடும்பமே ஆனந்தமாகிவிடும்.

’எனக்கு கீழே அமர்ந்து சாப்பிட்டு பழக்கம் இல்லையே’ என்று சொன்னால், நிச்சயம அவனுக்காக ஒரு டைனிங் டேபிள் கிடைக்கலாம். ஆனால், அவன் தனியே அமர்ந்து சாப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே, எங்கே, எப்படி இருக்கிறோமோ, அந்த சூழலுக்கு ஏற்ப மாறத்தான் வேண்டும். உலகில் எதுவும் மாறவே கூடாது என நினைத்தால் வாழ்க்கை நம் கையை விட்டுப் போய்விடும். ஆகவே மாற்றங்களைக் கண்டு பயங்கொள்ள வேண்டாம். நாம் எவ்வளவு சீக்கிரம் மாற்றங்களைப் புரிந்துகொள்ள கற்றுக்கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு நன்மை பயக்கும்!

அதுசரி, பிடிக்காத வேலையை, பிடித்ததாக மாற்ற ஆழ் மனதால் முடியுமா? என்னை எப்போதும் திட்டிக்கொண்டே இருக்கும் அலுவலக மேனேஜருக்கு என் மீது அன்பு வரும்படி ஆழ்மனதால் மாற்ற முடியுமா? எனக்கு நீண்ட நாளாக சம்பள உயர்வு கிடைக்கவில்லை, அதை கிடைக்கச் செய்ய முடியுமா? என்றெல்லாம் ஒரு நண்பர் கேள்வி கேட்டிருக்கிறார்.

முடியும் என்பதுவே பதில். எப்படி என்று பார்க்கலாம்.

**- அடுத்த இதழில்**


www.gyanaguru.com



Regain your confident smile with **Full mouth Dental Implants** at

# Rajan Dental

RAJAN
Dental



- Laser
- Braces
- Implants
- Root cancal
- Teeth Replacement
- Bleaching
- General Dentistry
- Cosmetic Dentistry
- AI based diagnostics

For appointments

**Rajan Dental,**
56, Dr.Radhakrishnan Salai,
Myalapore, Chennai 600 004.
Ph: 044 40105050 +91 96000 70003
www.rajandental.com
facebook.com/RajanDental